523

மறைமலை அடிகளார் மாட்சி

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
14 JUN 1949
MADRAS
523 / உ ழ
ACC-TAMIL 00350
O-,6MMAw
N49
101112

உ

தமிழ்த் தாய் வாழ்க!

மறைமலை அடிகளார் மாட்சி

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
14 JUN 1949
MADRAS

சென்னை, சிந்தாதிரிப்பேட்டை உயர்நிலைப்பள்ளித்
தமிழாசிரியர்,

புலவர். ந. ரா. சுந்தரராசன்
(முருகவேள்)
எழுதியது.

வெளியிடுவோர்:

திருவள்ளுவர் செந்தமிழ்ச் சிவநெறிக் கழகத்தினர்,
சைதாப்பேட்டை, சென்னை-15

விற்பனையாளர்:

தமிழ் இந்தியா பதிப்பகத்தினர்,
13, அருணாசல ஆச்சாரி தெரு, திருவல்லிக்கேணி,
சென்னை-5.

விலை: எட்டணா

RE, MADRAS
101112
O-,6MMAw
N49



அடிகளின் இளமைத் தோற்றம்

மே, 1949.

உரிமை ஆக்கியோர்க்கே

திருப்புகழமிர்தம் அச்சகம்,
சென்னை-2.

OFFICE OF THE ... OF BOOKS
14 JUN 1949
MADRAS

உ

தமிழ்த் தாய் வாழ்க

பதிப்புரை

ஒரு நாட்டின் வளர்ச்சியும் முன்னேற்றமும் அந்நாட்டுப் பண்பாட்டினையும் மொழிநலத்தினையும் காலத்திற் கேற்பப் பேணி வருதலை ஒட்டியே அமையும். இவ்வடிப்படை உண்மையை நன்குணர்ந்து கடைப்பிடியாகக் கொண்டு இத்தென்றமிழ் நாட்டை ஓம்பி வருபவர் நம் ஆசிரியர் மறைமலை அடிகளார். அவர்கள் அனைத்துலகிற்கும் பொதுவாகத் திகழ்தற்குரிய சிறப்பும் தகுதியும் உடையன என்று, தமது பரந்து விரிந்து ஆழ்ந்துயர்ந்த கல்வி கேள்வி ஆராய்ச்சிகளாற் கண்ட சிவநெறியாகிய பொது நெறிக்கும், செந்தமிழாம் நந்தமிழ் மொழிக்கும் செய்து போதரும் தொண்டுகள் அளவிடற்பாலனவல்ல.

ஆசிரிய அடிகளைத் தமிழகம் தக்காங்குப் பயன் கொண்டிலது. எனினும் அடிகளார் மேலை நாட்டுச் சான்றோர்தம் நெறிதழீஇத் தமக்கெனச் சில ஒழுங்கு முறைகளும் கட்டுப்பாடுகளும் வகுத்தமைத்துக் கொண்டு, நிலம்புடை பெயர்வதாயினும் அவற்றினின்றும் பிறழாது உறுதியாக நின்று தொண்டாற்றுந் திறனால் தம்மை இந்நாட்டுக்கு இயன்றவாற்றானெல்லாம் பயன்படுத்தி இருக்கின்றார். எஞ்சி நிற்கும் இன்னும் சில காலத்திற்குள்ளாகவாவது அடிகளாரைத் தமிழுலகம் பல்லாற்றானும் வல்லவாறெல்லாம் பயன் கோடல் வேண்டும்.

இவ்வுணர்ச்சியினைத் தமிழ் மக்களிடையே தூண்டுதற் பொருட்டே இச்சிறு நூல் வெளி வருகின்றது. தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்கள் தமது முன்னு

ரையிற் குறிப்பிட்டிருப்பது போல, அடிகளாரின் மாட்சிகள் அனைத்தையும் உணர்த்த விரிந்ததொரு நூல் வேண்டற்பாலதே. அடிகளாரே தமது வரலாற்றை வரைந்தளிப்பாராயின், அஃதொன்றனாலேயே இத் தமிழகம் எவ்வளவோ நலம் பெறும் என்பது எமது துணிபு. ஏற்றன செய்ய வேண்டுவது தமிழ் மக்கள் கடன்!

இந் நூலை நன் முறையில் எழுதியுதவிய கழக நண்பர், சிந்தாதிரிப்பேட்டை உயர்நிலைப் பள்ளித் தமிழாசிரியர், புலவர் ந. ரா. சுந்தரராசன் (முருகவேள்) அவர்கட்கும், காலத்தில் அச்சிட்டுத் தந்த திருப்புகழமிர்தம் அச்சக முகவர், திரு சிறுவை. மோகனசுந்தரம் அவர்கட்கும், பொருளுதவி செய்த அன்பர்கட்கும், அவர்களுள் சிறப்பாகச் சைதைத் திருவாளர். சி. சுப்பிரமணியன் அவர்கட்கும், அடிகளின் அழகிய இரு படங்களைச் சேர்க்க உதவிசெய்த திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக ஆட்சியாளர் திரு. வ. சுப்பையாப் பிள்ளை அவர்கட்கும், ஊக்கமூட்டி ஆக்கங் கோலும் அணிந்துரை ஈந்து ஆதரவளித்த தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்கட்கும், விற்பனை உரிமையை ஏற்றுக்கொண்ட தமிழ் இந்தியா பதிப்பகத்தினர்க்கும் எமது நன்றி என்றும் உரியதாகும்.

வாழியர் மறைமலை அடிகளார்!
வளர்க அவர்தம் தொண்டின் திறம்!!

சென்னை,
திருவள்ளுவர் ஆண்டு கசுஅ௰,
வைகாசி உ, (15—5—49)

ஒளியகம் ந. ரா. ஆடலரசன்,
அமைப்பாளன்,
சைதைத் திருவள்ளுவர்
செந்தமிழ்ச்சிவநெறிக்கழகம்

அணிந்துரை

'மறைமலை அடிகளார் மாட்சி' என்னும் இந்நூல் எனது பார்வைக்கு வந்தது. அதைப் பார்த்ததும் எனது உள்ளம் குளிர்ந்தது.

மறைமலை அடிகள் மாட்சி எது? அது கடல். அதில் ஒரு துடம் இந்நூலாசிரியரால் முகக்கப்பெற்றது. இவர் தம் அன்பும் முயற்சியும் போற்றற்குரியன.

அடிகள் உறவு, எனக்கு இளமையிலேயே கிடைத்தது. அவ்வுறவு, சங்க நூல்களை ஆராய்ச்சிக்கண்கொண்டு நோக்குமாறும், சித்தாந்த நூல்களை அறிவியற்கண்கொண்டு நோக்குமாறும் என்னை உந்தியது. இளமையில் எனது அறிவு விளக்கத்துக்கு ஒளி கான்றவர் சிலர். அவருள் ஒருவர் மறைமலை அடிகள்.

மறைமலை ஒரு பெரும் அறிவுச் சுடர்; தமிழ் நிலவு; சைவ வான். தமிழே சிவமாகவும் சிவமே தமிழாகவும் அடிகளுக்குத் தோன்றுகின்றன என்று யான் கருதுகின்றேன். இரண்டையும் ஒன்றாகக் கண்டவர் திருஞான சம்பந்தர். திருஞான சம்பந்தரிடத்து மறைமலை அடிகள் கொண்ட காதற்கு ஓர் அளவில்லை.

தென்னாடு பன்னெடுங்காலம் தன்னை மறந்து உறங்கியது. அவ்வுறக்கம் போக்கிய பெருமை மறைமலை அடிகளுக்கு உண்டு. அவர் தம் தமிழ்ப் புலமையும், வடமொழிப் புலமையும், ஆங்கிலப் புலமையும், ஆராய்ச்சியும், பேச்சும், எழுத்தும், தொண்டும் தென்னாட்டை விழிக்கச் செய்தன. தென்னாடு அடிகளால் விழிப்புற்றது என்று மண்ணும் முழங்கும்; மரமும் முழங்கும்.

அடிகள் பேச்சு, பல பேச்சாளரைப் படைத்தது; எழுத்து, பல எழுத்தாளரை ஈன்றது; நூல், பல நூலாசிரியன்மாரை அளித்தது. "அடிகளே தென்னாடு; தென்னாடே அடிகள்" என்று கூறல் மிகையாகாது.

அடிகள் வாழ்க! அவர்தம் நெறி வெல்க!!

இந்நூல் நன்முறையில் அமைந்துள்ளது. அடிகள் நடையும் கொள்கையும் பிறவும் நூற்கண் மலிந்து கிடத்தல் மகிழ்ச்சியூட்டுகிறது. விரிந்த நூல் ஒன்று இந்நூலாசிரியரால் யாக்கப்பெறின் தென்னாடு வளர்ச்சியுறும் என்று நம்புகின்றேன். நூலாசிரியர்க்கு எனது வாழ்த்து உரியதாக!

சாது அச்சகம்
3—4—49

திரு. வி. க.

உ

தமிழ்த்தாய் வாழ்க!

மறைமலை அடிகளார் மாட்சி

"என்னைநன் ருக இறைவன் படைத்தனன்
தன்னைநன் ருகத் தமிழ்செய்யு மாறே"

தோற்றுவாய்

திருமூலரின் மேலைத் திருமொழியினைத் தாமும் பெருமிதத்துடனும் உரிமையுடனும் எடுத்துக் கூறிக் கொண்டு இன்புறும் அளவில், தமிழ்த்தொண்டும் சிவத் தொண்டுமே தம் வாழ்க்கைக் குறிக்கோளாகக் கடைப் பிடித்து நின்று, இடரினும் தளரினும் தமதுறுநோய் தொடரினும் இடைவிடாது அவையிற்றை ஆற்றி வரு பவர் ஆசிரியர் மறைமலை அடிகள்.

ஆசிரியர் மறைமலை அடிகள்-செந்தமிழ் நலம் நிறைந்து சிறந்தினிது பொலியும் இச்சீரிய சொற்றொடர் தமிழ் கற்ருர்க்கும் கற்பார்க்கும் சிந்தைக் கினியதாய்ச் செவிக் கினியதாய் வாய்க்கினியதாய்த் திகழ்வதொன்ருகும். ஆயிரக்கணக்கான இஞ்ஞான்றை இளந்தமிழ் மாணவர் உள்ளங்களிலும், பெரும்புலவர் பலரின் எண்ணங்களி லும் இச்சீரிய செந்தமிழ்ச் சொற்றொடர்த் திருப்பெயர் இடம் பெற்றுப் பெருமதிப்புடையதாய்ப் பேணப்பட்டு வருகின்றது. அவர்தமக்கெல்லாம் ஆர்வமூட்டி உணர்ச்சி

யளிக்கும் அருமைத் திருமந்திரமாக இச்சொற்றொடர் விளங்குகின்றது. முதன்முதலாகவும் புதிதாகவும் கேட்கப் பெறுவார்க்கு இச்சொற்றொடரின் ஓசைநலம் தானே, பெருமதிப்பும் பெருவியப்பும் விளைவித்து அவரை அறியாமலே அவர்தம் உள்ளமெலாம் கொள்ளை கொள்ளுகின்றது. நம்பி ஆரூரர் பரவைநாச்சியார்பால் தாம்கொண்ட காதன் மிகுதியால்,

"பேர்பரவை பெண்மையினிற் பெரும்பரவை விரும்பல்கு
லார்பரவை அணிதிகழும் மணிமுறுவல் அரும்பரவை
சீர்பரவை ஆயிஞள் திருவுருவின் மென்சாயல்
ஏர்பரவை இடைப்பட்ட என்ஞைச எழுபரவை"

எனத் திரும்பத் திரும்பப் 'பரவை பரவை' எனக்கூறி இன்புற்றவாறு போல, தமிழ் கற்கும் மாணவர் அனைவரும் தனிப்பெருமதிப்பொடு தம் நாவினிக்கப் பல்காலும் இச்சொற்றொடரை நவிற்றி நவிற்றி மகிழ்ந்து வருகின்றனர்.

அடிகள் யார்?

அடிகள் யார் என்று அறிவிக்கப் புகுவது பட்டப் பகலிற் பகலவனைச் சுட்டிக் காட்டுதலை ஒப்பதேயாகும். எனினும் பட்டப்பகலினும் பகலவனைப் பார்த்தறியாப் பிறவிக் குருடர் பலர் உளராதல் போல அடிகளைக் கேட்டும் அறியாதார் பலர் இந்நாட்டில் உளர். அந்தோ! அவர்தம் அறியாமைதான் இருந்தவாறு என்னே! தமிழ் நாடும் தமிழ்மொழியும் செய்த தவப்பயனுகத் தமிழ்த் தாயின் அருமைப் புதல்வராகத் தோன்றியவர் அடிகள். அடிகளைத் தம் "கட்காண் கடவுள்" எனவும் "வழிபடு தெய்வம்" எனவும் கொண்டு "நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தேன் நினையாது ஒரு போதும் இருந்தறியேன்" என்னும் நிலையில் மனத்தகத்தே இருத்தி வைத்து வழிபட்டு வருகின்றனர் தமிழ் மாணவர். அவரனைவர் உள்ளங்களையும் திறந்து காணவல்

லார் எவரும் "என்னெஞ்சம் திறப்போர் நிற்காண்குவரே" என்ற படி அடிகளின் திருஉருவம் ஆங்கே பதிந்து விளங்கு தலைக் காண்பர்.

இங்ஙனம் இஞ்ஞான்றைத் தமிழறிஞர் அனைவரி னும் தலைமைசான்று தமக்கொப்பாரும் மிக்காரும் இல் லாப் பெருநிலையில், இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற பெரும் புலவர் என்று யாவரும் இனிதொப்பத் திகழ்பவர் அடிகள். அடிகளின் பெருமையினை,

"திசையனைத்தின்பெருமையெலாம் தென்றிசையேவென்றேற
மிசையுலகும் பிறவுலகும் மேதினியே தனிவெல்ல
அசைவில்செழுந் தமிழ்வழக்கே அயல்வழக்கின் துறைவெல்ல
இசைமுழுதும் மெய்யறிவும் இடங்கொள்ளும் நிலைபெருகத்"

தோன்றியவர் என்றே சுருங்கக்கூறி விளங்க வைக்கலாம்.

"கல்வி தறுகண் இசைமை கொடையெனச்
சொல்லப் பட்ட பெருமிதம் நான்கே"

என ஆசிரியர் தொல்காப்பியனார் பெருமிதம் என்னும் மெய்ப்பாடு பிறக்கும் இடங்களாகக் கூறிய நான்கனுள் ளும் சிறந்ததாய, கல்வி காரணமாகப் பிறக்கும் பெரு மிதத்துக்கு உரியவர் ஒருவர் தமிழகத்து உண்டென்றால் அவர் அடிகளே யாவர்.

"சீரள வில்லாத் திகழ்தரு கல்விச்செம் பொன்வரையின்
ஆரள வில்லா அளவு சென்றனர்?"

எனத் திருச்சிற்றம்பலக் கோவையாரில் மாணிக்கவாசகர் தோழி கூற்றின் வாயிலாக விடுக்கும் வினாவிற்கு விடை யாக, இவர் எனக் குறிப்பிட்டுணர்த்தத் தகும் சிறப் பினர் அடிகளே. அடிகளை நினைவு கூருங்காலெல்லாம் சிலப்பதிகாரத்தே,

"இமிழ்கடல் ஞாலம் முழுவதும் விளக்கும்
தமிழ்முழு தறிந்த தன்மையன் ஆகி"

எனப் போதரும் வரிகள் நம்மனோர்க்கு நினைவில் வருகின்றன.

'கற்றவர் பயிலும் நாகைக் காரோண'த்தில் தோன்றித் தம் இளமைக் காலத்தேயே கற்பன கற்று, கலைநலம் பெற்று, சென்னைக் கிறித்தவக் கல்லூரியின் முன்னைத்தமிழ்ப் பேராசிரியராய், இதுபோழ்தத்துப் பல்லவபுரம் பொதுநிலைக் கழகக்குரவராய் ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகட்கு மேலாகத் தன்னலங் கருதாது, தமிழ்நலமே கருதிப் பல இன்னல்கட்கிடையே தொண்டு புரிந்து வரூஉம் சான்றோரே நம் அடிகளார் ஆவர்.

அடிகளின் உயர்வும் அவர்தம் பெயரும்

அடிகளின் அளப்பரிய பேருயர்வினை அவர்தம் திருப்பெயரே யாவர்க்கும் ஓரளவு விளக்க வல்லதாக இருக்கின்றது. இடைக்காலத்தும் பிற்காலத்தும் நூல் வழக்கிலாதல் உலக வழக்கிலாதல் பெரிதும் வழங்கப் பெறாது அருகி மறைந்திருந்த 'அடிகள்' என்னும் மிகப் பழைய விழுமிய செந்தமிழ்ச் செஞ்சொல், 'குணவாயிற் கோட்டத் தரசு துறந்திருந்த குடக்கோச் சேரல் இளங்கோ அடிகள்' எனச் சிலப்பதிகாரத்தும், 'அறவண அடிகள்' எனமணிமேகலையினும் பயின்று வருதல் கொண்டு, முதன்முதற் கண்டெடுத்து வழக்கிற் கொணர்ந்து நடையாட விட்டவர் நம் அடிகளே யாவர். மறைமலை அடிகள் என்னும் பெயரால் இளங்கோஅடிகள் என்னும் பெயரை நினைவு கூர்கின்றோம். இளங்கோ அடிகள் என்னும் தொடர் மறைமலை அடிகள் என்னும் தொடரில் நிழலாடி எதிரொலி செய்கின்றது. முத்தமிழ்ப் புலமை வித்தகராய இளங்கோ அடிகட்குரிய நலங்களெல்லாம், மும்மொழிப் புலமைச் செம்மலாராகிய நம்

ஆசிரிய அடிகட்கும் உண்டென நம்மனோர் உளங்கொளிந் துணர்தற்கு இஃதொரு சான்றுபோலும்! தமிழ்ப் பெரியார். திரு. வி. க. அவர்கள் 'மனித வாழ்க்கையும் காந்தி அடிகளும்' எனத் தம் நூல் ஒன்றற்குத் தலைப்பு அமைத்துக் கொண்டதும், ஆளுடையடிகள் பட்டினத்தடிகள் சேக்கிழார் அடிகள் இராமலிங்க அடிகள் ஞானியார் அடிகள் என்றிங்ஙனமெல்லாம் தமிழகம் வழங்கத் தலைப்பட்டதும் நம் அடிகளாரைப் பின்பற்றியே ஆகும்.

அடிகளின் பெயரும் அதன் விளைவும்

மகப்பேறு இன்மையான் மிகப் பெரிதும் வருந்திப் பன்னெடுநாள் தவங்கிடந்து, பின்னர் நாகையினின்றும் திருக்கழுக்குன்றம் போந்து, அச்செல்வன் திருவருளால் பெற்றெடுத்தமை பற்றித் தாய்தந்தையர் அடிகட்குக் குழவிப் பருவத்தே 'வேதாசலம்' என்று பெயரிட்டனர். அதுபின்னர் துறவுநிலை புகுந்து நின்றவழிச் 'சுவாமி வேதாசலம்' என வழங்கலுற்றது. தமிழ்மொழியின்மீதுகொண்ட பற்றுக்காரணமாகவும், தனித்தமிழியக்கக் கிளர்ச்சியில் உள்ளத்துணர்ச்சி மிகமேலோங்கி நின்றதனாலும், அடிகளார் 'மறைமலை அடிகள்'எனத் தம் பெயரை மாற்றி அமைத்துக் கொண்டனர். அதனைத் தழுவியே யன்றோ சூரிய நாராயண சாத்திரியார் பரிதிமாற் கலைஞராயினர். சந்தோஷம் மகிழ்நன் என மாறினர். பாலசுந்தரம்பிள்ளை இளவழகனார் எனவும், பாலசுப்பிரமணியனார் இளமுருகனார் எனவும், இராசாக்கண்ணு அரசங்கண்ணனார் எனவும் வடமொழித் தொடர்ப்பெயர் ஒழித்துத் தமிழ்வடிவப் பெயர் அமைத்துக் கொண்டனர். மற்றும் கலியாணசுந்தரம் சோமசுந்தரம் சண்முகசுந்தரம் மீனாட்சிசுந்தரம் என்னும் வடமொழிப்பெயர்கள், முறையே மணவழகன் மதியழகன் அறுமுக அழகன் கயற்கண்ணி கவினன் எனவும்,நடராசன் சுந்தரராசன் என்பன, ஆடலரசு அழகரசு

எனவும், இரத்தினசபாபதி சபாபதி என்பன மணிமன்ற வாணன் அம்பலவாணன் எனவும்வழங்குவவாயின. இவையன்றியும், இளஞ்செழியன் நெடுஞ்செழியன் இளங்கோவன் இளம்பெருவழுதி அன்பழகன் அறிவழகன்கரிகாலன் கபிலன் மதிவாணன் மருதவாணன் என்றின்னோரன்ன தனித்தமிழ்ப் பெயர்கள் வழங்கத் தொடங்கியதும் அடிகளாலேயே ஆகும். கோவூர் கிழார் முதலிய சங்ககாலப் புலவர்களின் பெயர்களை ஒட்டி, அடிகள் தாம் துறவுநிலை கொள்ளா முன்பு தமக்கு நாகைகிழார் வேதாசலம்பிள்ளை எனப் பெயர் அமைத்துக் கொண்டதனை ஒட்டியேயன்றோ, கோவைகிழார் மயிலைகிழார் துடிசைகிழார் என்றிங்ஙனம் பெருமக்கள்பலரும் தம்பெயரை வழங்கிக் கொள்ளலாயினர்! ஞாயிறு நடுவண தாய் அமையக் கோள்களும் மீன்களும் அதனைக் குறிக்கொண்டு நன்கினிது இயங்குதலை ஒப்ப, அடிகளைக் குறிக்கொண்டேயன்றோ இத்துணை மாறுதலும் புரட்சிகளும் நிகழ்ந்திருக்கின்றன!

அடிகளின் தமிழ்ப் புலமை

தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்கள் கூறுமாறு போல, தம் வாழ்நாளெல்லாம் தமிழையே பேசித் தமிழையே எழுதித் தமிழையேகற்றுத் தமிழையே ஆய்ந்து தமிழையே பரப்பித் தம் உடல் பொருள் உயிர் மூன்றும் தமிழுக்கென்றே ஒப்படைத்து உழைத்துத் தமிழ்வண்ணமாய்த் திகழும் ஒப்புயர்வற்ற தமிழ்ப்பெரும் பேராசிரியர் அடிகளாரெனின், அடிகளின் தமிழ்ப் புலமையை அளவிட்டுரைப்பது யாங்ஙனம்? "அற்றை நக்கீரனும் பிற்றைச் சிவஞான முனிவரரும் ஓருருக்கொண்டு இற்றை மறைமலை அடிகளாராகப் போந்து தமிழ் வளர்க்கின்றார்" என்று திரு. வி. க. அவர்கள் கூறிக்காட்டும் முறையினும், வேறு பிறிதொரு திறம்பற்றி அடிகளின் புலமையினை யாரும் உணர்த்தல் இயலாது.

பிற்காலப் புலவர்கள், இலக்கணமாயின் பின்னூல்களாய நன்னூல் முதலிய சின்னூல்களையும், இலக்கியமாயின் இராமாயணம், பாரதம், ஏதேனும் சில புராணங்கள் முதலினவற்றையுமே கற்று வந்தனராக, அவர்களைப் போலாது, தமது இளமைக்கால முதலே செந்தமிழ் இலக்கண இலக்கியங்களை முறையாகக் கற்கத் தொடங்கித் தம் இருபத்தோன்ரும் அகவைக்குள், மிகச் செவ்வையாகத் தொல்காப்பியம் திருக்குறள் பத்துப்பாட்டு எட்டுத்தொகை திருவாசகம் திருக்கோவையார் சிந்தாமணி சிலப்பதிகாரம் மணிமேகலை பெரியபுராணம் சிவஞான போதம் சிவஞான சித்தியார் நாலடி நானூறு பழமொழி நானூறு போன்ற நூற்களையே தேர்ந்தெடுத்துஆராய்ந்து கற்றுப் புலமை நலம் முற்றிய திறம் மிகவும் வியக்கற்பாலது.

தமிழிற் புலமை நலத்துறைக் கூறுகள் எத்துணைத் திறம் உண்டோ, அத்துணைத்திறத் துறைக்கூறுகளிலும் அடிகள் தனித்தனியே பெருந்திறம் பெற்றவராவர். தமிழ்ப் பேராசிரியர் செல்வகேசவராய முதலியார் M. A. அவர்கள் குறிப்பிட்டவாறு போல, சங்கத் தமிழ் இலக்கியங்களைப் பதிப்பித்த பெருமை பேரறிஞர், தென்கலைச்செல்வர், பெரும்பேராசிரியர், உ. வே. சுவாமிநாத ஐயர் அவர்கட்கு உரியதென்ருல் அவையிற்றைப் பரப்பிய பெருமை அடிகட்கே உரியதாகும். ஆகுபெயர் அன்மொழித்தொகை பற்றி அரசஞ்சண்முகனுரை யுள்ளிட்ட பெரும்புலவர் பலரிடையே நிகழ்ந்த வழக்கீட்டிற் கலந்து நின்று, அடிகள் வரைந்த கட்டுரைகளானும், தொல்காப்பியப் பொருளோத்தினைப் பிழிந்தெடுத்து வடித்துவைத்தாலென்ன, வரைந்தளித்துள்ள சோமசுந்தரக்காஞ்சி ஆக்கத்தானும் அடிகளின் அளப்பரிய இலக்கணப் புலமைத்திறம் புலனுகும்,

மற்றும் இங்ஙனமே திருவொற்றி முருகர் மும்மணிக் கோவை, சோமசுந்தரக் காஞ்சி, சாகுந்தல நாடகம் என்பனவற்றால் அடிகளின் செய்யுளியற்றும் திறம் விளங்கும். பண்டை உரையாசிரியர்களைப்போல அடிகளார் உரைவரையும் பெற்றிமை ஆசிரியர் நச்சினார்க்கினியர் கொண்டு கூட்டிக் குழறுபடை செய்தனவற்றை மறுத்து வரைந்த பட்டினப்பாலை, முல்லைப்பாட்டு ஆராய்ச்சி யுரைகளானும், திருவாசக விரிவுரையானும், சாகுந்தல நாடகம் திருவொற்றிமுருகர் மும்மணிக் கோவை என்பனவற்றிற்குச் சேர்த்துள்ள உரைக் குறிப்புக்களானும் இனிது வெளிப்படும். இவையன்றியும் அடிகள் இயற்றிய கோகிலாம்பாள் கடிதங்கள், குமுதவல்லி அல்லது நாகநாட்டரசி என்பன, தமிழிற் புதுவது (Novel) புனையுந்திறம் இதுவென அத்துறை வல்லார்க்கெல்லாம் அறிவித்துணர்த்தும் இருபெரு விளக்கங்களாகும். சிறுவர்க்கான செந்தமிழ் அடிகளின் பாடநூல் எழுதும் ஆற்றலுக்கு அரியதொரு எடுத்துக் காட்டு. இங்ஙனமே மறுப்புரை வரைதல் ஆராய்ச்சி செய்தல் என்பனவற்றிலும் அடிகள் தனித்தனியே பெருந்திறம் பெற்றவர் என்பது வெளிப்படை.

இம்மட்டோ! இலக்கியம் (Literature) கணக்கு (Mathematics) வரலாறு (History) நிலநூல் (Geography) அறிவியற் கூறுகள் (Physics Chemistry Physiology Botany etc.,) கல்வெட்டு (Inscriptions) மெய்ப்பொருள் நூல் (Philosophy) மருத்துவம் யோகம் என்னும் இன்னோரன்ன பலகலைகளிலும் அடிகள் வல்லவராவர். சங்கரநமச்சிவாயப் புலவர் பவணந்தியாரைக் குறிப்பிடுதல் போலப் பல்கலைக் குரிசில் (All round genius) எனவே அடிகளைக் குறிப்பிடுதல் பொருந்தும். கரிகாலனைத் 'தாய்வயிற்றிருந்தே தாயம் எய்தி'னன் என முடத்தாமக் கண்ணியார் மொழிதல் போல, அடிகளும் கருவிலேயே திருவுடையராய்த் தோன்றினர் போலும்!

'நூலறி புலவன், நல்லிசைப் புலவன், பலர் புகழ் நன்மொழிப் புலவர் ஏறு, தொல்லாணை நல்லாசிரியன், நின்னொடு புரையுநர் இல்லாப் புலமையோய், அஞ்சொல் நுண் தேர்ச்சிப் புலவன், ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி மாங்குடி மருதன், நூல்வழிப் பிழையா நுணங்கு நுண் தேர்ச்சி, நுண்மாண் நுழைபுலம் என வரூஉம் சங்க நூற் செய்யுட்டொடர்கள் பலவற்றிற்கும் இற்றை ஞான்று முற்றிலும் பொருந்தத் தக்க இலக்கியமாக இலங்குபவர் அடிகளேயெனின் அவர்தம் தமிழ்ப் புலமையை யாமோ அளவிட்டுரைக்கற்பாலம்?

வடமொழி வன்மை

அடிகள் தமிழில் எத்துணைப் புலமை உடையரோ அத்துணையளவிற்கு ஒத்த புலமை வடமொழி ஆங்கிலம் என்னும் இரு பிற பெருமொழிகளிலும் உடையராதலின் தமிழறிஞர் வரிசையின் மட்டும் அடிகளை வைத்துக் கருதுதற் கில்லை.

> ''நாடன் என்கோ? ஊரன் என்கோ?
> பாடிமிழ் பனிக்கடற் சேர்ப்பன் என்கோ?
> யாங்கனம் மொழிகோ? ஓங்குவாட் கோதையை ...''

எனப் பொய்கையார் என்னும் புலவர் சேரமான் கோக்கோதை மார்பனை என்னென்று பாடுவது என்று அறியாமல் மயங்கியது போல, அடிகளைத் தமிழ்ப்புலவர் என்பதோ வடமொழி வல்லவர் என்பதோ ஆங்கில அறிஞர் என்பதோ என்னென்று கூறுவ தென்று அறியப் பெறாமல் நாமும் மயங்கவேண்டும் நிலையில் அடிகள் திகழ்கின்றார்! வடமொழியில் உள்ள பல்வேறு வேதம், ஆகமம், உபநிடதம்,மிருதி, பிராமணம், இதிகாசம்,புராணம், என்னும் எவற்றையும் அடிகள் முறையாகக் கற்றுத் துறை போயவர் என்பது காளிதாசர் எழுதிய சாகுந்தல நாடகத்தினை அழகிய இனிய தூய செந்தமிழில் தெளிவாகச்

செய்துள்ள மொழிபெயர்ப்பானும், தென்புலத்தார் யார்? சாதி வேற்றுமையும் போலிச் சைவரும், தமிழாசிரியர் தழுவிய வடமொழி நூல்கள், சைவசித்தாந்த ஞானபோதம் என்பன வற்றானும் நன்கினி துணரப்படும். வடமொழிக்கு உரிமை கொண்டாடும் இனத்தினரிற் கூட அடிகட் கொத்த வடமொழிப் புலமையுடையோர் மிகச் சிலரே இருப்பர்.

சுருங்கக் கூறுதல் வேண்டுமாயின், சேனாவரையரைச் சிவஞான முனிவரர் கூறுமாறு போல வடநூற் கடலை நிலைகண்டுணர்ந்தவர் என்றே அடிகளாரை நாமும் கூறுதல் கூடும்.

ஆங்கில அறிவு

தமிழறிஞர் வேறெவர்க்கும் அமையாத தனிப்பெரு வீறு அடிகட்கு அமைந்தமை அவர்தம் ஆங்கில அறிவின் பயனாலேயேயாம். அடிகள் இளைஞராயிருந்த காலத்தே தமிழறிஞர்களுள் இரண்டொருவரே அத்திபூத்தாற் போல் ஆங்கில அறிவு பெற்றிருந்தனராதலின், தம் இளமைக் காலத்திலேயே அடிகள் ஒருபெரும் அறிவிள வளஞாயிறு எனத் தமிழகத்தே திகழ்தற்குரிய பெரு வாய்ப் புடையராயினர். Shakespeare, Tennyson என்னும் ஆங்கிலப் புலவர் பெயர்களைச் செகப்பிரியர் தேனிசையன் எனத் தமிழில் வழங்கச் செய்தவர் அடிகளே. ஆங்கிலக் கல்வியில் அடிகள் பட்டம் ஒன்றும் பெற்றில ராயினும், ஆங்கிலத்தே மிகப் பெரும் பட்டங்கள் பெற்றாரும் கூட அடிகள்போல் பலகலையிலும், பல துறையிலுமுள்ள உயர்ந்த பல ஆங்கில நூல்களையும் கற்றிரார். என்னை? அவரெல்லாம் வெறும் அரசியல் அலுவல்கள் பெறுதற் கென்றே யன்றி அடிகளைப்போல் அறிவு நலம் பெறுதற் கென்று ஆங்கிலம் பயின்றவர் அல்லர் ஆதலின் என்பது.

The Ocean of Wisdom என்னும் ஆங்கில இதழொன்றை அடிகளார் நடாத்தி இருக்கின்றனர். Ancient and Modern Tamil Poets என்பது அடிகளின் ஆங்கில நூல்களுள் ஒன்று. The Conception of God as Rudra, Saiva Siddhantha as a Philosophy of practical Knowledge என்பன அடிகளார் ஆங்கிலத்திற் செய்துள்ள குறிப்பிடத் தக்க அரிய பெரிய விரிவுரைகள். தமிழறியாதாரும் தம் தமிழ் நூல்களின் அருமை யுணர்தற் பொருட்டுத் தம் நூல்கள் பலவற்றிற்கு ஆங்கிலத்தில் விரிந்து பரந்த சிறந்த முகவுரைகள் வரைந்திருப்பதும், தம் நூல்கள் ஒவ்வொன்றிலும் ஏராளமான அரிய ஆங்கில நூல்களை எடுத்தாண்டிருப்பதும் அடிகளின் ஆங்கில அறிவுக்குத் தக்க சான்றுகளாகும்.

தமிழில் தாம் எழுதும் சிறந்துயர்ந்த செவ்விய நடை நலம் சிறிதும் குன்றுதவாறு ஆங்கிலத்தும் அடிகள் எழுத வல்லவராவர். ஆங்கிலக் கவிஞருள் தலைசிறந்தவரான செகப்பிரியரின் நாடகங்கள் பலவற்றையும் அவையிற்றிற்கு அறிஞர்கள் பற்பலர் செய்துள்ள உரைகளையும் தாமே மிக முயன்று அழுந்திப் பயின்றவாற்ருல் தாம்பெற்ற அறிவின் திறனைச் சாகுந்தல நாடக ஆராய்ச்சியில் அடிகள் விளங்கக் காட்டி இருக்கின்றனர்! அல்லதூஉம் சிந்தனைக் கட்டுரைகள் என்னும் பெயரால் ஆங்கிலத்தே உரைநடை எழுதுதலில் வல்லவராய்ப் பெயர் பெற்றிருந்த அடிசன் என்பாரின் கட்டுரைகளைத் தீவிய செந்தமிழில் இயற்கை ஓவியக் காட்சிகள் ஆங்காங்கே அழகுற அமையத் தெளிவுற மொழிபெயர்த்திருக்கின்றனர் அடிகள்!

மரணத்தின் பின் மனிதர்நிலை, மனிதவசியம் (Personal Magnetism) யோக நித்திரை (clairvoyance) தொலைவி லுணர்தல் (Telepathy) மக்கள் நூருண்டு உயிர் வாழ்தல் ஏப்

படி? பொருந்தும் உணவும் பொருந்தா உணவும் என்பன போன்ற பேராராய்ச்சிப் பெரும்பயன் நூல்கள், அடிகள் தாமே அவற்றின் முன்னுரைகள் சிலவற்றிற் குறித்திருப்பதுபோல இதற்கு முன்பு வேறெவராலும் எழுதப்படாமல் அடிகள் ஒருவராலேயே தமிழில் முதன் முதற் புதிய முறையில் விரிவாகவும், திருத்தமாகவும், விளக்கமாகவும், எழுதப்பட்ட நூல்களாதலோடு அவைகள் தாமே அடிகளின் ஆங்கில உணர்வினை விளக்கப் போதியனவாகும்.

விரிவுரை ஆற்றல்

'பல்லவை கற்றும் பயமிலராய் நல்லவையுள் நன்கு செலச் சொல்லாதார்' பலர் இணரூழ்த்தும் நாறு மலர் அனையராய், உளராகவும்,

> "நாநலம் என்னும் நலனுடைமை அந்நலம்
> யாநலத் துள்ளதூஉம் அன்று"

என்றாங்கு, அடிகள் மிகச் சிறந்த நாநலம் உடையவராய்க் கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும் வேட்ப மொழியும் திறலினர். அடிகட்குச் சைவசித்தாந்தம் அறிவுறுத்திய ஆசிரியராகிய சைவசித்தாந்த சண்டமாருதம் சோமசுந்தர நாயகர் அவர்கள் தாம் பேசச் செல்லும் இடங்களிலெல்லாம் அடிகளையும் அழைத்துச் சென்று இளமைக் காலத்திலேயே அடிகளைத் திறம்படப் பேசுதற்குப் பழக்கிவைத்தனர்!

இவர் தமக்கு முன்பிருந்த புலவர்கள் பலர் இராமாயணம், பாரதம், பாகவதம், கந்தபுராணம், திருவிளையாடற் புராணம் போன்றன வற்றைப் பிரசங்கித்தல், காலக்ஷேபம் செய்தல் முதலினவற்றையே தம்புலமைத் திறமாகக் கொண்டிருந்தனர். எனவே, கரந்தைத் தமிழ்ச் சங்கத் தலைவர் செந்தமிழ்ப் புரவலர் தமிழவேள் த. வே. உமா

மகேசுரம் பிள்ளை அவர்கள் கரந்தைக் கட்டுரையிற் குறிப்பிட்டுண்மை போலத் தமிழில் அவைக்களங்களில் விரிவுரை, நிகழ்த்தும் நெறிமுறைகளை வகுத்துப் பண்படுத்தி வளர்த்தவர்கள் ஆசிரியர் மறைமலை யடிகளும் சிவத்திரு. ஞானியார் அடிகளுமே என்று கூறிவிடலாம்.

நல்லூர் ஆறுமுக நாவலர் அவர்களின் பிரசங்கத்தையும், திருப்பாதிரிப் புலியூர் ஞானியார் அடிகளின் உபந்நியாசத்தையும் இஞ்ஞான்றை விரிவுரை. சொற்பொழிவு நிலைக்குக் கொண்டுவந்து பண்படுத்தி வளர்த்துவிட்டவர் பல்லவபுரம் ஆசிரியர் மறைமலை அடிகளே யாவர். விரிவுரை – சொற்பொழிவு என்னும் சொற்களையே தோற்றுவித்தவரும், விரிவுரைகள் சொற்பொழிவுகள் நிகழ்தற்கு நிலைக்களமான இடங்களின் பெயர்களாய சங்கம் சமாஜம் ஸ்தாபனம் சம்மேளனம் சபா மகாசபா போன்ற வடசொற்களுக்கு மாறுகக் கழகம் மன்றம் நிறுவனம் மாநாடு அவை அவைக்களம் பேரவை என்பன போன்ற சொற்களை வழங்குவித்தவரும் அடிகளே.

அடிகள் நம் தென்றமிழ் நாடு முழுவதும் அன்றி யாழ்ப்பாணம் முதலிய இடங்கட்கும் சென்று ஆங்காங்கே செந்தமிழ்ச் சொன்மாரி பொழிந்து தமிழகத்தை உணர்ச்சியூட்டித் தமிழ்ப்பயிர் செழித்தோங்கச் செய்ததோடு, தாம் துறவுநிலை புகுந்த சில நாட்களுக்கெல்லாம் வடநாடும் சென்று முழுவதும் சுற்றிக் கல்கத்தா, காசி, அரித்துவாரம், துரோணுசிரமம், டில்லி, மதுரா, பம்பாய், சிகந்தராபாத்து முதலான பற்பல நகர்களிலும் ஆங்கிலத்தே விரிவுரைகள் நிகழ்த்தி ஆரிய சமாசத்தார் பிரம சமாசத்தார் முதலானோர் வியப்பும் மயக்கும் உவப்பும் மிக எய்தும் வண்ணம் சைவசித்தாந்த தத்துவத்தின் மேன்மையும் தமிழ் மொழியின் சிறப்பும்

விளங்குமாறு விரிவுரை நிகழ்த்திப் போந்துளார் எனின் வேறு பிறிது யாது கூறவல்லேம்?

சைவசித்தாந்த ஞானபோதம், கடவுள் நிலைக்கு மாறான கொள்கைகள் சைவம் ஆகா, பழந்தமிழ்க் கொள்கையே சைவ சமயம், தமிழர் மதம் போன்ற அரும் பெறல் ஆராய்ச்சிப் பெருநூற்கள் ஆங்காங்கே அடிகள் நிகழ்த்திய விரிவுரைகளே யாகும்.

ஆராய்ச்சித் திறன்

தமிழில் ஆராய்ச்சி என்னும் சொல்லையே முதன் முதலிற் பெரிதும் வழக்கிற் கொணர்ந்தவரும், ஆராய்ச்சி யாவது யாதென்றே அறியாமற் குருட்டுப் போக்கில் நெட்டுருச் செய்து வெறும் புராணப் புலமை ஒன்றே பெரும்பாலும் உடையராய்ச் சென்று கொண்டிருந்த பழமைப் பற்றினராகிய பழந்தமிழ்ப் பண்டிதர்கள் கண்டு மருண்டு வெகுண்டு கடிந்தெதிர்க்கும் வகையில் விடாப்பிடியாய் அஞ்சாமையோடும் ஆண்மையோடும் அம்முறையினைத் தமிழிற் கொண்டுவந்து புகுத்தியவரும் அடிகளே யாவர். அது பட்டினப் பாலை ஆராய்ச்சி, முல்லைப் பாட்டு ஆராய்ச்சி, சாகுந்தல நாடக ஆராய்ச்சி, திருக்குறள் ஆராய்ச்சி, சிவஞான போத ஆராய்ச்சி என்பனவற்றால் இனிது விளங்கும்.

இற்றைக்குச் சற்றுச் சிலபல ஆண்டுகட்கு முன்வரையில் தமிழ்ப் பெரும்புலவர்கள் முன்னிருந்தாரைப் பின்னிருந்தாராகவும், பின்னிருந்தாரை முன்னிருந்தாராகவும், பிற்காலத் தியற்றப் பெற்றதனை முற்காலத் தியன்றதாகவும், முற்காலத் தியன்றதனைப் பிற்காலத் தியற்றப் பெற்றதாகவும், பொய்யை மெய்யாகவும், மெய்யைப் பொய்யாகவும், கற்பனையை வரலாறாகவும், போலியை உண்மையாகவும் தலைதடுமாறக் கருதி நிலைதடுமாறிக்

குழறுபடைகள் செய்து போந்தனர். ஔவையார் ஒருவரா பலரா? அகத்தியர் எத்துணையர்? என்பன போன்று அவரிடை நிகழ்ந்த வழக்கீடுகள் எண்ணில. கரிகாலன் வரகுணன் என்னும் பெயருடையார் பலர் அரசர் இருந்தனராக அவர்களை யெல்லாம் ஒருவராகவே கருதி வந்தனர். களவழிபாடிய பொய்கையாரும், இன்னிலை பாடிய பொய்கையாரும், திருமாலைப் பெரியாராகிய பொய்கை ஆழ்வாரும் ஒருவராகவே கொள்ளப் பட்டனர்.

இம்மட்டோ! மேனாட்டு ஆசிரியன்மாரும் வியந்து புகழ்ந்து விதந்து போற்றும் நிலையிற் சிறந்திருந்த பேராசிரியர், மனோன்மணீயம். சுந்தரம் பிள்ளை அவர்கள் தாமே The Age of Thirugnana Sambandar என்ற தம் அரிய ஆங்கில ஆராய்ச்சி நூலில் தெளிவாக ஒரு முடிவும்கூற இயலாத நிலையில் நெகிழ்ந்து சென்றுள்ளனரெனின், உண்மை வரலாற்றுணர்ச்சியும் கால ஆராய்ச்சியும் ஒரு சிறிது மின்றிப் பழந்தமிழ்ப் பண்டிதர்கள் எங்ஙனம் வறிதிருந்தனர் என்பது நன்கு விளங்கும்.

பழந்தமிழ்ப் பண்டிதர்கள் கிரேதாயுகம் திரேதாயுகம் துவாபரயுகம் கலியுகம் என்பனவற்றையே தம் கால ஆராய்ச்சி அளவையாகக் கொண்டும் புராணம் சரித்திரம் கதை காதை என்னும் சொற்களையே ஒன்றற்கொன்று வேறுபாடு தெரிந்து கொள்ளாமல் மயங்கியும் வழங்கி வந்த நிலையில், வரலாறு என்னும் புதியதொரு அழகிய அருஞ் சொல்லைக் கண்டெடுத்துப் பெய்து 1000 பக்கங்களில் மாணிக்கவாசகர் வரலாறும் காலமும் என்னும் செந்தமிழ்த் தனிப்பேராராய்ச்சிப் பெரும்பயன் நூல் தம் நல்லிசைப் புலமை நலந் தோன்றவும், தமது அரும் பெறல் ஆராய்ச்சி முடிபுகள் யாவும் அடங்கவும், தமிழ்த் தாய்க்குத் தனிப்பெரும் உரைநடைநூல் இல்லாப்

பெருங்குறை தணியவும், 'ஒரு பெரும் விழுமிய மெய்ம் மணிக்கோயிலாய்ச் சைவமெய்ச் சமயத் தெய்வமும் செந் தமிழ்த் தெய்வத் தனிமகளும் ஒருங்கு கூடி மெய்யறிவுச் செங்கோல் ஒளியரசு நடாத்தும் மாப்பெரு நிலையமாய் நிலைபேறுற்று நிலவுமாறு' செய்தமைத்தருளிய அருமைத் திறத்தினை என்னென்பேம்!

ஆசிரியர் மெய்கண்ட தேவர் இயற்றி யருளிய சிவ ஞானபோதம் மொழி பெயர்ப்பு நூலன்று செந்தமிழ் முதல் நூலே என்று அஞ்சா தெடுத்துரைத்து ஆண்மை யோடு நிலைபெறுத்தியவரும், மாணிக்க வாசகர் காலம் கி. பி. மூன்றும் நூற்றாண்டே என்பதனை எவரும் மறுக் கொணா வகையில் நிலைநாட்டித் தனித்தமிழ்க்காலம் புத்தகாலம் சமணகாலம் சைவவைணவகாலம் பார்ப்பன காலம் ஆங்கிலகாலம் எனத் தமிழக வரலாற்றின் கால வரன்முறைகளை ஒழுங்கு படுத்தி உறுதி செய்து கொடுத்தவரும், தமிழர்கள் தம் ஆண்டுக் கணக்கினை இப்போது நடைமுறையில் வழங்கிவரும் சகாப்தங்கட்கு மாறாகத் திருவள்ளுவர் காலத்தினையே கைக்கொள்ளுதல் வேண்டும் என்னும் கருத்தினராய் அதனை முதன்முதல் ஆராய்ந்து அறுதியிட்டு உறுதிசெய்து நெடுநாட்களாகத் தம் நூல்களிற் கையாண்டு வருபவரும், தமிழர் நாகரி கம் தமிழ்மொழிச் சிறப்பு சைவசித்தாந்த தத்துவ உண்மை சங்க இலக்கியங்களின் மேன்மை முதலிய வற்றை மிகத் திறம்பட ஆராய்ந்து தம் நூல்களானும் விரிவுரைகளானும் யாண்டும் பரவச்செய்து அவை தம்மை மறுமலர்ச்சி பெறுமாறு செய்தவரும் அடிகளே.

அடிகளின் நடுநிலைமையும் அஞ்சாமையும்

காய்தல் உவத்தல் அகற்றி ஒரு பொருட்கண் நடு நிலையாளராய் ஆய்தல் உடைய அடிகளார் சிவநெறியின் கண் தாம் பெரிதும் ஈடுபாடுடையரா யிருந்தும், யானைமுகப்

பிள்ளையார் வணக்கம் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டிற்கு முன் இல்லையாய் அதன் இறுதியில் இருந்தே தோன்றலாயிற்று என்றும், அங்ஙனமே முருகவேளிடத்துத் தாம் நிறைந்த அன்புடையராயினும் கந்தபுராணத்திற் சொல்லப்படும் முருகன்கதை, முழுமுதற் கடவுளாகிய முருகப்பிரானைப் பற்றியதன்றி வடநாடாண்ட அரசன் ஒருவனையே பற்றியதாம் என்றும், தடாதகைப் பிராட்டியார் கதையும் இங்ஙனமே இறைவியைப் பற்றியதன்று என்றும், தக்கன் வேள்வி தகர்த்த வீரபத்திரரும் தாருகாவன முனிவர்களின் செருக்கடக்கிய பிட்சாடனரும் முழுமுதற் கடவுளர் அல்லரென்றும், பிறர் பழிப்புக்கும் எதிர்ப்புக்கும் சிறிதும் அஞ்சாது துணிவோடு முதன் முதல் ஆராய்ந்து கூறினர்.

சேக்கிழார் அடிகளிடத்தும் பெரிய புராணத்தின் கண்ணும் மிகப்பெரிதும் மதிப்புடையராயினும் பெரிய புராணத்துட் சேக்கிழார் கூறியது பொருந்தாதெனை, சிவபிரான் எழுதி விடுத்த திருமுகப்பாசுரம் பெற்றவரும் இறைவனது திருக்கூத்துச் சிலம்பொலி கேட்டவரும் சுந்தரர் காலத்திருந்த கழறிற்றறிவாராய சேரமான் பெருமாள் அல்லர் அவர்க்கு முன்னிருந்தார் வேறொருவர் எனவும், இறைவன் பலகை இடுவித்தது பாணபத்திரர் என்பார்க்கேயன்றித் திருநீலகண்ட யாழ்ப்பாணர்க்கன்று எனவும், சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருக்கயிலாயத்தே அனிந்திதை கமலினி என்பாரைக் காதலித்து அதன் விளைவாக மண்ணுலகில் தோன்றினாரென்றல் அறிவாராய்ச்சிக்குப் பொருந்துமாறில்லை எனவும், பெரிய புராணத்தின்கண் இடைச் செருகல்கள் பல நிகழ்ந்துள்ளன எனவும், பொய்யடிமை இல்லாத புலவர் எனச் சுந்தரர் குறிப்பிட்டது மாணிக்கவாசகரையேயாம் எனவும், நம்பியாண்டார் நம்பிகள் சிறந்த சிவநேயம் அடி

யார் நேயம் உடையவராயினும் தெய்வப் பெற்றிமை யுடையார் எனக் கோடற்குச் சான்றில்லை எனவும்,

"பொய்ப்பால பொய்யேயாய்ப் போயினபொய் அல்லாத
மெய்ப்பால மெய்யாய் விளங்கினவே" என்னும் வண்ணம்,

முதன் முதலாக அடிகள் மிகத் துணிவோடும் நடுநிலை யோடும் தமது கூர்த்த அறிவு மதுகையால் ஆராய்ந் தெடுத்து விளக்கிக் காட்டி யிருக்கும் திறம் யாவரானும் மிகப்பெரிதும் வியக்கற்பாலது. அவற்றின் திறமெல் லாம் விரிப்பிற் பெருகியும் தொகுப்பின் எஞ்சியும்போ மாதலின் இவ்வளவின் விடுக்கின்றும்.

உரைநடைச் சிறப்பு

தமிழில் பல ஆயிரக் கணக்கிற் செய்யுட்கள் உளவா தல் போலச் சிறந்த உரைநடை நூற்கள் இல்லை யென்று இருந்த ஒரு பெருங் குறையைப் போக்கிய உயர்வும் உரி மையும் உடையோர் ஆறுமுக நாவலர் போன்ற அறிஞர் சிலரே யாவர். அவருள்ளும் அடிகள் மிகவும் குறிப் பிடத் தகுந்த பெருஞ் சிறப்பினராவர். பரிதிமாற் கலை ஞர் நாவலரைப் புகழ்ந்துரைத்த 'உரை நடை கைவந்த வல்லாளர்' என்னும் சொற்றொடர் அடிகட்கு மிகவும் ஏற்புடையதாகும். மிக உயர்ந்த அரிய இலக்கியச் செந் தமிழ் நடையில் தேனூற்றெழுக் கெனவும், அமிழ்த வெள்ளம் பெருக்கெடுத்தா லெனவும், பயில்வார் உள்ள மெலாம் கொள்ளைகொள்ளும் பான்மையில் இழுமெனும் மொழியான் விழுமியது பயின்று ஒழுகிய ஓசை நலம் அமையத் தடைவிடைகிளந்து தருக்க நெறி இயைபு பிற ழாமல், தாமே புதிது படைத்துப் புணர்க்கும் மூழுமணி யனைய தனித் தமிழ்க் கலைச்சொற்களும் குறியீடுக ளும் சொற்றொடர்களும் விரவி, அரும்பெறல் ஆராய்ச்

சிக் கருத்துக்கள் பொதுள, இடை யிடையே சான்றோர் முது மொழிகளை மடுத்து அழகுற எழுதப்பெறும் அடிகளின் உரைநடை யழகின் அருமையினை என்னென்பேம்!

பரிமேலழகரின் உரைநடை இனிமையும், நக்கீரரின் தருக்க நெறி பிறழாத் தடைவிடை நலமும், சேனாவரையரின் திட்ப நுட்பமும், சிவஞான முனிவரரின் சொற்றொடர் நீட்சியும் மறுப்புரை மாட்சியும், பிறவுமெலாம் ஒருங்கு கலந்தியைந்த சிறந்துயர்ந்த செந்தமிழ் உரைநடை எழுதும் திறனுடையர் அடிகள். அடிகளின் 'அறிவுரைக் கொத்து' நூலே கட்டுரை என்னும் தமிழ்ச்சொல்லினையும், தமிழிற் கட்டுரை எழுதும் முறைகளையும் தமிழ் மாணவரிடையே பரப்பிற்று. இவற்றின் திறமெல்லாம்ஈண்டெடுத்துரைப்பான் புகிற் பெருகும்.

மறுப்புரை வரையும் வன்மை

மறுப்புரை வரைதல் என்பது ஒருதனிக்கலை. தமிழிலுள்ள பல்வேறு வகையினவான நூற்களுள் மறுப்புரை நூற்றொகுதிகளும் ஒரு திறத்தனவாகும்.மேலும் மேலும் அறிவாராய்ச்சிகள் வளர்ந் தோங்கி விளங்கப் பெறுதற்கு மறுப்புரை நூல்கள் சிறந்த கருவிகளாய் வேண்டப்படும். இப்போதைக்குச் சிறிது காலத்துக்கு முன்னர் இத்தகைய மறுப்புரை நூல்கள் மிகப்பெரிதெழுந்து உலவி வந்தன. ஆசிரியர் சிவஞான முனிவரர் இத்துறையில் மிகச்சிறந்த வல்லாளராவர். இலக்கண விளக்கச் சூறாவளி, எடுத்து என்னும் சொல்லுக்கு இட்ட வைரக்குப்பாயம், என்னை இப்பவத்தில் என்னும் செய்யுட் சிவசமவாத வுரை மறுப்பு, சித்தாந்த மரபு கண்டன கண்டனம் என்பன சிவஞானமுனிவரரின் சிறந்த மறுப்புரை நூல்கள்.

அந்நூல்களையெல்லாம் ஆராய்ந்து கற்று அழுந்தப் பயின்ற செந்நாப் புலவராதலானும், சொற்போர் புரித

லையும் மறுப்புரை வரைதலையுமே தொழிலாகக் கொண்டு தமிழுலகம் முற்றும் சுற்றும் வெற்றி வாரணமாய்த் திகழ்ந்திருந்த சைவசித்தாந்த சண்டமாருதம் சோமசுந்தர நாயகரவர்கள் மாணவராதலானும், அடிகள் இளமையிலேயே மறுப்புரை எழுதுதலில் மிகத்தேர்ச்சி பெற்றவராயினர். முதற்குறள்வாத நிராகரணம், மெய்கண்ட சிவதூஷண நிக்கிரகம், முனிமொழிப் பிரகாசிகை, சோமசுந்தரக் காஞ்சி ஆக்கம் போன்றன அடிகள் கட்டிளமைக் காலத்தேயே வரைந்த கன்னித் தமிழ் மறுப்புரை நூல்களாகும்.

"திராவிடப் பிரகாசிகை" என்னும் சிறந்ததொரு நூல் செய்தவரும் திருவாவடுதுறை ஆதீனப் புலவராயிருந்தவரும், ஆறுமுக நாவலர் அவர்களின் மாணவருமாகிய பெரும்புலவர் சபாபதி நாவலர் அவர்கட்கும் சோமசுந்தர நாயகர்க்கும்,

"தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும்"

என வரூஉம் பாடலில் முனிமொழியாவது யாது? என்பது பற்றி மாறுபாடு நிகழ்ந்ததாக, தம் ஆசிரியர் சோம சுந்தர நாயகர் கருத்தின்படி அவர்தம் சார்பில் முனிமொழி என்றது வடமொழியில் உள்ள வியாச சூத்திரமே எனவுரைத்து, முனிவர் என்றது மாணிக்க வாசகரையே என்னும் நாவலரவர்களின் கருத்தினை மறுத்து, அடிகளார்தம் இளமைக் காலத்தே வரைந்து விடுத்த நூலே முனிமொழிப் பிரகாசிகை என்பது. அதனைத் தாம் இறந்துபடும் நிலையில் முதுமைப் பருவத்தராய் நோய்வாய்ப் பட்டுக் கிடந்த காலத்துக் கண்ணுற நேர்ந்தவழித் தம் கருத்து மறுக்கப் பெற்றிருப்பினும் கழி பெரு மகிழ்ச்சியுற்று, தமக்குப் பின்னர் இலக்கண இலக்

கிய நலம் நலக்கவும் சிறக்க எழுதவல்லார் தமிழகத்தே உளராவர் கொல்லோ எனப் பன்னெடு நாளாய்த் தம் மிடையே இருந்த ஒருபெருங் குறை இவரால் ஒழிந்த தெனக்கூறி, நாவலரவர்கள் அடிகளின் சிறு முதுக்குறை வினைப் பெரிதுமிகப் பாராட்டி, அடிகளைத் தம் பக்கல் வரவழைத்து நேரிற் காண விழைந்தன ரெனின், வேறு பிறிது நிகழ்த்துவ தென்னை?

பழந்தமிழ்க் கொள்கையே சைவசமயம் என்னும் நூலில் சிவஞான போதச் சிற்றுரை விளக்கம் முதலிய சிறந்த பல நூல்களை வெளியிட்ட திரு. பொ. முத்தையாப்பிள்ளை அவர்களையும்; சோமசுந்தரக்காஞ்சி ஆக்கத்தில் நா. கதிரைவேற்பிள்ளை, மயிலை சண்முகம் பிள்ளை, அரசஞ்சண்முகனர் போன்றவர்களையும்; மாணிக்க வாசகர் வரலாறும் காலமும் என்னும் நூலில் தமிழ்வரலாறு எழுதிய தஞ்சை இராவ்பகதூர் K. சீனிவாசப் பிள்ளை, மு. இராகவ ஐயங் கார், ரா. இராகவ ஐயங்கார், Dr. S. கிருட்டினசாமி ஐயங்கார், எம். சீனிவாசஐயங்கார் கோபிநாதராவ் போன்ருர் பலரையும் அடிகள் மறுத்துரைத்திருக்கும் திறம் அறிந்து மகிழ்தற்பாலது.

அடிகளின் மறுப்புரைகள் தம்மைப் பயிலும் மாண வர்க்குப் பெருமிதமும் ஆண்மையும் தனிப் பேருணர்ச் சியும் விளைவிக்கும். இடையிடையே [அறிவில் கூற் றென மறுக்க, மிகப் பெரியதோர் ஏதமாம் என்க, உள்ளீ டில்லாப் போலியுரை என்றொழிக, பொருத்தமில் போலி யுரையாம் என மறுக்க, நெகிழ்ந்துரையாடி இழுக்கினுர் என்க, விடுக்குமா றறியாது விழிக்கும் நீரராவர், அழி வழக்குப் பேசுதல் அடா தென்க, சிறுமகாஅரும் எள்ளி நகையாடுவர் என்றொழிக, வெள்ளிடை மலையென விளங் கற்பாற்று, பொள்ளெனப் புலனுகும், மைத்துனர் பல்கி மருந்திற் றெளியாத பித்தன் என்று எள்ளப்படும், வைரத்தூண் என நாட்டப் பட்டமை காண்க, உண்மை

யாதல் செல்லாதென்று கடைப்பிடிக்க என்பனபோன்று அடிகள் எழுதும் மறுப்புரை வாய்பாடுகளின் மாட்சிமையை யாம் என்னென்பேம்!

'நயனங்கள் மூன்றுடைய நாயகனே தண்டித்தாற்
சயமன்றோ வானவர்க்குத் தாழ்குழலாய் சாழலோ'

என்றமை போல, அடிகளின் அழகிய தமிழால் இகழப்படுவதும் அறிஞர்க்குப் பெருமை போலும்!

'நோற்றோர் மன்றநின் பகைவர் நின்னொடு
மாற்றோர் என்னும் பெயர்பெற்று
ஆற்றோ ராயினும் ஆண்டுவாழ் வோரே'

என்னும் புறநானூற்று வரிகள் ஈண்டைக்குப் பெரிதும் இயைபுடையவாய் நினைவிற்கு வருகின்றன.

தனித்தமிழ் இயக்கத் தலைவர்

தனித்தமிழ் என்பது சங்க காலத்திற்குப் பிறகு பல காரணங்களால் வழக்கு வீழ்ந்தது. தொல்காப்பியம் திருக்குறள் சங்கநூற்கள் என்பனவற்றில் ஒரோவழி அருகிக் காணப்படும் வடசொற் கலப்புப் படிமுறையே பிற்காலநூற்களில் பெருகி வளர்வதாயிற்று. வடவர்கலப்பின் பெருக்கமும் அவர் தமக்கு ஏற்பட்ட முதன்மையும் சிறப்பும், தமிழகத்தில் மேலும்மேலும் மிகுதிப்பட மிகுதிப்பட நாளடைவில், வடசொற்களும் வடவர் கருத்துக்கள் கொள்கைகளும் தமிழிடை வந்து புகுதலாயின. வடமொழி நூல்கள் தமிழில் மொழி பெயர்க்கப் பெறலாயின. கம்பர் வில்லிபுத்தூரார் தாயுமானவர் அருணகிரியார் போன்ற சான்றோர்களும் அளவின்றி வடசொற்களைத் தமிழொடு கலந்து வழங்கலாயினர். பட்டி தொட்டி காடு மேடுகட்கெல்லாம் வடமொழி மூலத்தி

னின் றெடுத்துத் தலபுராணங்கள் பாடப் பெற்றன. மணிப்பிரவாளம் என்னும் வட சொற்கலப்பு மிக்க தமிழ் உரைநடை புதுவதாய்ப் பரவத் தலைப்பட்டது.

திருமறைக்காடு வேதாரணியம் எனவும் திருவெண் காடு சுவேதவனம் எனவும் திருமுதுகுன்றம் விருத்தா சலம் எனவும் குரங்காடுதுறை கபிஸ்தலம் எனவும் வழங்குவ வாயின. தில்லை திருவண்ணுமலை திருவானைக் காவல் என்பன சிதம்பரம் அருணுஜலம் ஜம்புகேஸ்வரம் எனவும், சோறு தண்ணீர் துணி என்பன சாதம் ஜலம் வேஷ்டி எனவும் வழங்கத் தொடங்கின. திருக்கோயில் வழிபாடும் தமிழர் கரணங்களும் வடமொழியிலேயே நடைபெற லாயின. தமிழர் தம் பெயரெல்லாம் வட மொழிப் பெயரேயாய் மாறின.

இம்மட்டோ! தொல்காப்பியம், ஐந்திரம் என் னும் வடமொழி வியாகரணத்தினின்றும்; திருக் குறள், மனுஸ்மிருதி கௌடில்யர் அர்த்த சாத்திரம் வாத்ஸ்யாயனர் காமசூத்திரம் என்பனவற்றினின்றும்; நாயன்மார்கள் ஆழ்வார்களின் பாடல்கள், வடமொழி வேதத்தினின்றும், செய்தமொழிபெயர்ப்புக்களே எனக் கூறப்பெறும் நிலையும் எய்திற்று. திருமந்திரம் வட மொழி ஆகமங்களையும், சிவஞானபோதம் இரௌரவ ஆகமத்தையும், பெரியபுராணம் உபமன்யு பக்தவிலா சம் அகத்திய பக்த விலாசம் என்பனவற்றையும், திரு விளையாடல் ஆலாசிய மான்மியத்தையும் பெயர்த் தெடுத்த படிச் சந்தங்களே என வடவர் கூறலுற்றனர். இதுவேயோ! தொல்காப்பியர் திரணதூமாக்கினி என வும், திருவள்ளுவர் ஸ்ரீவல்லபர் எனவும், மெய்கண்டார் சத்தியஞான தரிசனிகள் எனவும் வடமொழி மறு பெயர்கள் பெற்றனர். அந்தோ! வடசொற் கலப்பால்

தமிழே தெலுங்கு மலையாளம் கன்னடம் துளுவம் என்னும் மொழிகளாகப் பிரிந்து நின்று திரிபுற்று வெவ்வேறு இடங்களில் தனித்தனி மொழிகள் போல வழங்குவதாயிற்று. அந்தோ! இஃதென்னை கொடுமை?

இவ்வாற்றானெல்லாம் வடசொல் எது தமிழ்ச் சொல் எது என்று அறியமாட்டாத நிலையில், வடசொற் கலப்பின்றித் தமிழ்மொழி தனித்தியங்காது என்னும் கொள்கை பரவத் தலைப்பட்டதாக, சங்க காலத்திற்குப் பின்னர் ஏறத்தாழ 2000 யாண்டுகளாக மறைக்கப் பட்டும் மறக்கப்பட்டும் கிடந்த தனித்தமிழ் வழக்கினை, மீண்டும் இந் நூற்றாண்டில் உயிர்ப்பித்து உணர்வளித்து நன்கினிது வளர்த்து உலவிச் சிறப்புறுமாறு செய்தவர் அடிகளே யாவர் என்பதனை யாவரும் அறிவர்.

தமிழ்நாட்டின் மிகப்பெரிய நிலையங்களாய் அமைந்த சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், கரந்தைத் தமிழ்ச் சங்கம் என்னும் இரு பெரு நிறுவனங்களும் அவற்றோடு தொடர்புடைய பெருமக்கள் பலரும், அடிகளாரின் அடிச்சுவட்டின் வழி நின்று செந்தமிழ்ச் செல்வி தமிழ்ப்பொழில் முதலினவற்றால் தனித் தமிழ் வளர்ச்சியிற் கருத்தூன்றித் தொண்டாற்றி வருவதும்; கலைச் சொல்லாக்க மாநாடுகள் வெளியீடுகள் ஆங்காங்கே நிகழ்ந்து வருவதும்; தமிழ்நாட்டின் பல பகுதிகளில் ஆங்காங்கே நடைபெற்று வரும் தமிழ்க்கல்லூரிகளும், அவற்றிற் பயின்று வெளிப் போதரும் புலவர்மணிகளும், பயிலும் மாணவ மணிகளும் தனித்தமிழிலேயே பேசவும் எழுதவும் நூலியற்றவும் வல்லராய்ப் பெருகி வருதலும்—தனித் தமிழ்வளர்ச்சிக்கும் வழக்கிற்கும் பல்லாற்றானும் எத்துணையோ எதிர்ப்புக்களும் இடர்ப்பாடுகளும் மிகப்பெரிதும் இன்றளவும் இருந்துவரினும், ஆண்மையோடு அஞ்

10112

சாது தனியே நின்று தம் பெயரையும் தனித் தமிழில் மாற்றிக் கொண்டு, தம் நூல்களையும் மிக விழிப்போடு மறந்தேனும் மருந்திற்கேனும் ஒரு வட சொற் கலப்பும் காணப்படா வகையில் தனித் தமிழிலேயே எழுதத்தலைப் பட்டு,முன்னரே வடசொற் கலப்போடு எழுதப்பட்டு விட்டனவற்றை மறுபதிப்புக்களில் திருத்தியும் மாற்றியும் வட சொற்களுக்கு நேரிய தனித் தமிழ்ச் சொற்கள் அமைத்துக் கொடுத்தும் புதுப்பித்து, ஏறத்தாழ 30 ஆண்டுகட்கு மேலாகப் பணி புரிந்துவரும் அடிகளின் அளப்பரிய பேருழைப்பின் விளைவேயன்றோ? இத்தகைய சான்றோரைத் தனித்தமிழ் இயக்கத் தலைவர் என்பதிற் றடையென்னை?

அடிகளும் தன்மதிப்பு இயக்கமும்

தனித் தமிழ் இயக்கத்திற்குத் தலைவர் என்பதொன்றே, தன்மதிப்பு இயக்கத்திற்கும் அடிகட்கும் உள்ள தொடர்பினை நன்கு விளக்குவதாகும். தன்மதிப்பு இயக்கம், ஆரியச் சூழ்ச்சி சாதிச் செருக்கு சமயக் காழ்ப்பு, மூடப்பழக்க வழக்கங்கள் முதலியன ஒழித்துப் பகுத்தறிவுக் கொள்கையும் சீர்திருத்தப் போக்கும் தன்மான உணர்ச்சியும் அறிவியல் வளர்ச்சியும் பிறவும் செழித்தோங்கப் பாடுபடுகின்றது. இவைகள் யாவும் அடிகட்கு முற்றிலும் உடன்பாடே. கடவுள் நிலைக்கு மாறுன கொள்கைகள் சைவம் ஆகா, சாதி வேற்றுமையும் போலிச் சைவரும், பழந்தமிழ்க் கொள்கையே சைவசமயம், சீர்திருத்தக் குறிப்புக்கள், பண்டைத்தமிழர் ஆரியர், வேளாளர் நாகரிகம்; தமிழ்நாட்டவரும் மேல் நாட்டவரும் என்னும் நூல்களால் தன்மதிப்பு இயக்கத்தின் உயிர்நிலைக் கொள்கைகளாய பலவற்றை முதன் முதல் தமிழறிஞர்களுள்ளே வகுத்துக் கொடுத்தவர் அடிகளாரே என்பதுணரலாம்,

கம்பன் கவிதை இழுக்குகளையும், புராணப் பொய்ம்மைகளையும் வடமொழியாளர் கொடுமைகளையும் பழந்தமிழ்ப் பண்டிதர்களுள்ளே கண்டறிந்து ஒளிவு மறைவின்றித் தெளிவாக வெளியெடுத்துரைத்தவரும்; பகுத்தறிவு நெறிக்கு வழிகோலிச் சீர்திருத்தங்கட்காகப் போராடி அறிவியல் ஆராய்ச்சி வளர்ச்சிகட்குத் துணை நின்றவரும் அடிகளார் ஒருவரே. ஆரியத் தன்மை ஒழிப்பில் அடிகள்போல் வேறெவரும் மிக உரமாக முதன் முதல் முற்பட்டு முனைந்து ஏயன்றிலர். சிவஞான முனிவரர் ஆறுமுக நாவலர் போன்றுரும் ஏனைய பெரும் புலவர் பலரும் தம்மைச் 'சற்சூத்திரர்' எனப் பெருமிதத்துடன் கூறிக் கொண்டனராக, அடிகளோ 'சூத்திரர்' என்னும் சொல் குறிக்கும் இழிபொருட் டிறமெல்லாம் மிக எடுத்து விளக்கி வன்மையாகக் கடிந்து உரமாக மறுப்பர். பண்டிதர்கள் பலரும் வடமொழி கடவுண்மொழி எனவும், வடமொழி வேதங்கள் இறைவனே செய்தன எனவும் தலைமேற் கொண்டு போற்றினராக; அடிகளோ கடவுண் மொழி என்பதொரு மொழி உலகத்தில் இன்றெனவும் இருக்குமாயின் அதற்குப் பொருத்தமும் சிறப்புமுடையது தமிழ்மொழியே யன்றிப் பிறிதில்லை எனவும், ஊனுண்டல் உயிர்க்கொலை செய்தல் சோமக்கள் குடித்தல் சூதாடல் காமவெறி கொள்ளல் என்னும் இன்னோரன்னவற்றையே மிகுத்துப் பாடியுள்ள வடமொழி வேதங்களின் ஏதங்களைக் கிளைந்தெடுத்துக் கூறி அவை வெறும் 'கள்ளுக்கடைச் சிந்துக்கள்' போல்வனவே எனவும், தேவார திருவாசகச் செந்தமிழ்த் திருமறைகளாய தமிழ்ப் பனுவல்களோடு அவை ஒருசிறிதும் ஒப்புடையன வாகா எனவும் மெய்ப்பித்து நிலைநிறுவினர். காதன் மணம் கலப்புமணம் கைம்பெண்மணம் தமிழர்மணம் முதலினவற்றை வற்புறுத்திச் சீர்திருத்தத் துறையில் அடிகள் பெரிதும் உழைத்துள்ளனர்.

"சாத்திரம்பல பேசும் சழக்கர்காள்
கோத்திர மும்குல முங்கொண் டென்செய்வீர்?"

என அறைகூவிச் சாதி வேற்றுமைச் சழக்கினை ஒழித்துக் கட்ட அடிகள் பெரிதும் பாடுபட்டிருக்கின்றார். இன்னோரன்னவாற்றால் அடிகள் தன்மதிப்பு இயக்கத்திற்குச் செய்துள்ள நன்மைகள் புலனாகும்.

அடிகளும் சைவமும்

அடிகளார் சைவசமயத்தின் மாட்டுப் பெரிதும் ஈடுபாடும் பற்றும் உடையராவர். சைவம் தமிழ் என்னும் இரண்டும் அடிகளாரின் இருகண்களாய் அவர்தம் பேச்சும் மூச்சுமாகும். தமிழும் சைவமும் தம்முள் ஒன்றோடொன்று பிரிப்பரியன என்பது அடிகளாரின் துணிபு. ஆயினும் இளங்கோ அடிகளைப் போன்ற நடுநிலையினராதலின் அடிகள் சமயக் காழ்ப்பு உடையவரல்லர். அடிகளாரின் சைவம் இப்போதுள்ள நடைமுறைச் சைவமன்றித் தனிப்போக்கும் சிறப்பு முடையதாகும். அடிகளாரின் சைவத்தில் வடமொழிக்கு முதன்மை இல்லை. சாதி வேறுபாடுகட்கு இடங் கிடையாது. புராணப் பொய்ம்மைகள் புகப்பெறமாட்டா. மூடப் பழக்க வழக்கங்களோ போலிச் சடங்குகளோ பகுத்தறிவுக் கொவ்வாத பழமைக் கொள்கைகளோ அங்கே கடிந்து ஒதுக்கப் பெறும். சைவம் பெரிதா வைணவம் பெரிதா? சைவம் உயர்ந்ததா பிற சமயங்கள் உயர்ந்தனவா? என்பன போலும் சமய வழக்குச் சழக்குகள் தலைகாட்டமாட்டா.

அடிகளார் சைவம் வைதிகச் சைவமன்று, அறிவுச் சைவம்! சாதிச் சைவமன்று, சமரசச் சைவம்! ஆரியச் சார்புடைய சைவமன்று, அருந்தமிழ்க் குரிய சைவம்! புராணப் போலிச் சைவமன்று, வரலாற்றுண்மைச் சைவம்! அற்புத நிகழ்ச்சிச் சைவமன்று, ஆராய்ச்சியுணர்வுச் சைவம்! அடிகளின் சைவத்தில்

தமிழுக்கும் தமிழ் நூல்களுக்குமே முதலிடம். வடமொழி நூற்களே சைவசமயத்திற்குப் 'பிரமாணம்' என்பது அடிகளார்க்கு உடன்பாடன்று.

சைவ சித்தாந்தம் என்பது வடமொழித் தொடர்ப் பெயர் போலத் தோன்றினும் தமிழர்க்கே உரிய மெய்ப் பொருள் உணர்வுக் கொள்கை என்பதும், அஃது இஞ் ஞான்றை அறிவியல் நூலார் அனைவரும் ஒப்பத் தகுந்த பெருமையினதாய் அளவை நெறிக்கும் பகுத்தறிவுக்கும் சிறிதும் மாறுபடாததென்பதும், வடமொழிப் பயிற்சி வேண்டும் என்னும் யாப்புறவு இன்றித் தமிழ் நூற்கள் வாயிலாகவே அதனைப் பயின்றுணர்ந்துகொள்ளல் கூடும் என்பதும், அடிகள் மெய்ப்பித்துக் காட்டியன வாகும்.

அடிகளால் சைவசமயம் பெரிதும் ஆக்கம் பெற் றுள்ளது. சைவ சமய வளர்ச்சி குறித்து அடிகள் அரும் பாடுபட்டிருக்கின்றார். ஞாலமெலாம் சைவம் பரவி நலந்தரல் வேண்டுமென அடிகள் சாலவும் விரும்பு கின்றார். ஆயினும் அடிகள் வைதிக சைவரால் 'நாத்திகர்' எனத் தூற்றப்பெற்ற காலமும் உண்டு. கடவுளுணர்ச்சி குன்றிச் சமயப்பற்றும் தளர்ந்து குலைந்துவரும் இந் நாளில் தமிழிளைஞர் ஒரு சிலராதல் கடவுளுணர்ச்சியின ராய்ச் சமயப் பற்றினராய்க் காணப்படுதற்குக் காரணம்,

"ஞானத் தால்தொழு வார்சில ஞானிகள்
ஞானத் தால்தொழு வேன்உனை நானலேன்
ஞானத் தால்தொழு வார்கள் தொழக்கண்டு
ஞானத் தாய் உனை நானும் தொழுவனே"

என்றபடி, அடிகள் போன்றார் சிவநெறியொழுகும் திறம் நினைந்தே யன்றிப் பிறிதில்லை யெனின், அடிகள் ஆற்றி யிருக்கும் சைவத் தொண்டின் திறம் உணரலாம்.

அடிகளும் அறிஞர்களும்

அடிகளின் அருமை பெருமைகளை அறிந்து வியந்து பாராட்டாத அறிஞர் எவரு மிலர். உரைப்பார் உரைப் பவையெல்லாம் அடிகள் சிறப்புரையா நிற்கும் புகழே யாகும். தமிழ்நாட்டின்இஞ் ஞான்றை அரசியற் றனிப்பெருந்தலைவர் பெரி யார் ஈ. வே. ரா. அவர்கள், அடிகளாரின் அறிவுரைக் கொத்து நூல் குறித்து எழுந்த கிளர்ச்சியின்போது குடியரசில், 'தாமாக ஒன் றும் எழுதாமல் பிறர் எழுதினவற்றை ஓலை ஏட்டினின்று அச்சிடும் ஒருவரைச் சுப்பிரமணியர் அவ தாரம் அகத்தியரின் மறு பிறவி சரசுவதியின் உருவம் என்று சிலர் விளம்பரப் படுத்துகின்றார்கள். ஆனால் சொந்தத்தில் தாமாகவே ஆராய்ந்து பல அரிய பெரிய நூல்கள் எழுதிய ஒருவரின் பெருமையை அவர்கள் பரவவிடாமல் மறைத்துவிட முயல்கின்றார்கள். அவர்கள் விளம்பரப் படுத்தும் நூறு சுவாமிநாத ஐயரை ஒரு தட்டிலும் ஒரு சுவாமி வேதாசலத்தை மற்றொரு தட்டிலுமாக வைத்து நிறுத்துப் பார்த்தால் வேதா சலத்தின் தட்டுத்தான் கீழே இருக்கும் என்பது நிச்ச யம்' என்று எழுதி இருப்பதோடு, 'மறைமலை அடிகளும் M. L. பிள்ளையும் எனக்கு வலக்கையும் இடக்கையும் போன்றவர்கள். எனக்குப் பகுத்தறிவுப் பாதையில் ஏதேனும் ஐயம் உண்டாகும் போதெல்லாம் அவர்களிடமே தீர்த்துக்கொள்வேன்' என்றும் ஒரு சம யம் கூறியிருக்கின்றாரென்றால் அடிகள் மாட்டுப் பெரியார் அவர்கள் கொண்டிருக்கும் மதிப்பினை என்னென்பது?

மற்றும் தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்கள் தம் வாழ்க்கை வரலாற்றில் தாம் இளைஞராயிருந்த காலத்தே அடிகள் இராயப்பேட்டைக் குகானந்தநிலையத்திற்கு அடிக்கடிப் போதருவர் என்றும், அதுபோழ்தத்து அடிகள் பால் தம் ஐயங்கள் பலவற்றையும் வினவுவர் என்றும் குரிச்சி (Easy-chair) யில் சாய்ந்து கொண்டே அவற்றிற்

குத் தக்க தெளிவுரைகளை அடிகள் எளிதாகக் கூறுவர் என்றும், அடிகள் அளித்த தகுதிச் சான்றிதழினாலேயே வெஸ்லி கல்லூரியில் தாம் தமிழ்ப்பேராசிரியர் பதவி பெற்றமையின் அதனைத் தாம் இன்னும் போற்றிப் பாதுகாத்து வைத்துள்ளனர் என்றும் கூறுதலால், அடிகள் திறத்து அவர்தம் பெருமதிப்பினை உணரலாம்.

அல்லதூஉம், தாகூர் சட்ட விரிவுரையாளர் பேராசிரியர். கா. சுப்பிரமணியப் பிள்ளை M. A. M. L. அவர்கள். தாம் எழுதிய இலக்கிய வரலாறு என்னும் நூலில் சங்க காலப் புலவர்கள் முதல் தற்காலப் புலவர்கள் வரையில் அவரவர்கள் திறம் அறிந்து பாராட்டிவிட்டுக் கடைப்படியாக, அதன் இறுதியில் இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற பெரும்புலவர் என அடிகளை மிக விரிவாகப் பெரிதும் புகழ்ந்து போற்றி இருத்தலானும், அடிகளின் ஆராய்ச்சி முடிபுகளையே நிலைபெறுற்றனவாக மலைவின்றித் துணிந்து அவைதம்மை ஆண்டாண்டு தம் நூல்களுள் எடுத்துக் காட்டுதலானும், தமிழர் சமயம் திருநான்மறை விளக்கம், மெய்கண்டாரும் சிவஞானபோதமும் என்பன போலும் அவர்தம் நூற்கள் அடிகளின் கொள்கை எதிரொலியேயாவன என்பது இருவர் தம் நூற்களையும் முறையே ஊன்றிக் கற்பார்க்கு நன்கினிது புலப்படுதலானும், அடிகளின அடிச்சுவட்டினையே அவர்கள் முழுவதும் பின்பற்றி நின்றனர் என்பது இனிது விளங்கும்.

1929 ஆம் ஆண்டில் திருப்பாதிரிப்புலியூரில் ஆறு நாட்கள் மிகச் சிறப்பாக நிகழ்ந்த வரலாற்றுச் சிறப்புடைய மிகப்பெரிய சைவர்மாநாட்டிற்கு, அவ் ஆறு நாட்களும் அறிஞர் அனைவரும் ஒப்பத் தலைமை ஏற்று மாநாட்டை நன்கு நடத்தவல்ல தகுதிமிக்க பேறிஞர் மறைமலை அடிகளார் ஒருவரே என, அதனை முன்னின்று நடத்துவித்த ஞானியாரடிகள் தேர்ந்தெடுத்தனரெனின்,

நாகை அடிகளிடத்து ஞானியாரடிகள் கொண்டிருந்த நன் மதிப்பினை நவில்வ தெங்ஙன்? மறைமலை அடிகள் தலைமை ஏற்க ஞானியாரடிகள் முன்னின்று நடத்திய யாநாட்டில் அவ்விருவரும் திகழ்ந்த காட்சி 'ஓங்கும் பொருட் சமய முதற்சைவ நெறிதான் பெற்ற புண்ணியக்கண் இரண் டென்ன' இருந்திருக்கும் போலும்!

> பாடிய செந்தமி ழாற்பழங் காசு பரிசில்பெற்ற
> நீடிய சீர்த்திரு ஞானசம் பந்தன் நிறைபுகழான்
> நேடிய பூந்திரு நாவுக் கரசோ டெழின்மிழலைக்
> கூடிய கூட்டத்தி னல்உள தாய்த்திக் குவலயமே"

என வருந் திருமொழியும் ஈண்டைக்கு நினைவில் வரு கின்றது.

நாவலர். ச, சோமசுந்தரபாரதியார் அவர்கள் அடிகளைத் தமிழ்ப்பொழிலில், "தனித்தமிழ்ப் பேருரையாளர் தன் னிகரற்ற சிவாநுபூதிச் செல்வர் உயர்திரு. மறைமலை அடிகள்" எனக்குறிப்பிட்டுச் சிறப்பித்துள்ளார். தொல் காப்பியப் பாயிரவிருத்தி ஏகபாதம் மாலை மாற்று நுண்பொருண்மாலை இன்னிசை இருநூறு முதலின அரும்பெறல் நூல்கள் பலவற்றினை இயற்றிய இலக்கணப் பேராசிரியர் அரசஞ் சண்முகனார், அடிகளிடத்துக் கொண்டிருந்த பெருமதிப்பினைச் 'சோம சுந்தரக் காஞ்சி' ஆக்கத்திற் காணலாம். தமிழலகைத் தொடர்,மெய்ஞ்ஞானத்தின் திருமுன்னர் அஞ்ஞானத்தின் வழக்கீடு, வடிவுதிருந்த அறிவு வளர்ந்தவகை, The mystic aspect of the Tamil Alphabets போன்ற பல அரிய நூல் களின் ஆசிரியராகிய பேரறிஞர். பொறியியற் கலைஞர் பா. வே. மாணிக்கநாயக்கர் அவர்களும் அடிகளின் கொள்கைகளையே முழுவதும் தழுவி நின்றனர் என்பது அவர்கள் எழுதிய 'கம்பன் புளுகும் வால்மீகி வாய்மை யும்' போன்றனவற்றால் உணரப்படும்.

அண்மைக் காலத்தே இலக்கண அறிவில் அரும்புகழ் பெற்றிருந்த பெரும் புலவர் மன்னார்குடி சோமசுந்தரம் பிள்ளை அவர்கள் தாம் வரைந்த சொல்லதிகாரக் குறிப்புரை மறுப்புரையில், அடிகளே தமிழ் உரை நடை எழுதுந் திறனில் தலைமைசான்றவராவர் எனக் குறிப்பிட்டிருக்கின்றார். வேலூர் ஊரீஸ் கல்லூரியின் தலைமை ஆசிரியராய்த் திகழ்ந்த க. ப. சந்தோஷம் B. A. L. T. அவர்கள் 'அகரமுதல எழுத்தெல்லாம்' என்னும் குறளில் 'ஆதிபகவன்' என்னும் தொடரிலுள்ள 'ஆதி' என்னும் சொல் நிற்குமிடத்தில், 'ஆங்கு' என்னும் உவம உருபுச் சொல் ஒருகால் அமைந்திருந்திருத்தலும் கூடும் எனத் தம் கருத்தினைச் செந்தமிழ்ச் செல்வியில் வெளியிட்ட சிறிய கட்டுரையில், தம் கருத்து முடிந்த முடிபன்று உள்ளத்தே தமக்குத் தோன்றுவ தென்னும் அவ்வளவே என்பாராய், 'ஆதிபகவன்' எனவே இருந்தாங்குக் கொள்ளும் ஆசிரிய அடிகளார் போன்றார் கருத்துகட்கு மாறுபட்டு எழுதநினைந்து முன்வந்திலேன் என்னும் கருத்துப் பட, "அடிகளார் ஒன்றைத் துணியவும் வல்லர் அன்றித் துணிக்கவும் வல்லர். அஃது அறிவுரைக் கொத்தால் அறிந்தாம்" எனப் பெருமதிப்புடன் எழுதிப் போந்தார்.

பேராசிரியர். சுந்தரம் பிள்ளை M. A. அவர்கள், அடிகள் புத்தகக்கடை நாராயணசாமிப் பிள்ளை என்னும் தம் இயற்றமிழாசிரியர் கட்டளைப்படி ஆசிரியப் பாவாற் கடிதம் ஒன்று வரைந்து விடுத்தவழி, சங்கச் செய்யுட்கள் போலும் நடைநலம் உடையதாய் அமைந்திருந்த அச் செய்யுட் சிறப்புக்கருதி மிகவும் மகிழ்ந்ததோடு, தாம் கருதியதற்கு மாறாக அடிகள் நேரிற் சென்றுழி மிகவும் இளைஞராயிருத்தல் கண்டு பெரிதும் வியந்து, அடிகளின் சங்கநூற் பயிற்சியைப் புகழ்ந்து பாராட்டினர்.

எனினும், சுந்தரம் பிள்ளை அவர்கள் திருஞானசம் பந்தர் "தோடுடைய செவியன்" என்னும் திருப்பதிகத்தினை மூன்றாண்டிற் குளக்கரையில் உமைப்பால் உண்டவழி, எச்சில் மயங்கியது எனக்கடிந்த தந்தைக்கு மறுமொழி யாகப் பாடினர் என்பதற்குச் சான்றில்லை எனக் குறித் துச் சென்றனராக, அடிகளோ அவர்களை 'அறியாது கூறினார்' எனக் குறிப்பிட்டு,

"போதையார் பொற்கிண்ணத் தடிசில்பொல் லாதெனத்
தாதையார் முனிவுறத் தானெனை யாண்டவன்
காதையார் குழையினன் கழுமல வளநகர்ப்
பேதையாள் அவளொடும் பெருந்தகை இருந்ததே"

என்பன முதலிய பல அரிய சான்றுகள் உண்மையை எடுத்துக்காட்டி விளக்கியிருக்கின்றனர். மற்றும் சுந்தரம் பிள்ளை அவர்கள் மாணிக்கவாசகர் ஞானசம்பந்தப் பிள்ளையார்க்கு முன்னிருந்தார் என்பதன்கண் தமக்கு ஐயம் நிகழாநிற்கின்றது எனக் குறித்துப்போயினாராக, அடிகளாரோ அவ்வையம் போக்கிச் செவ்வையாகத் தெளிவு செய்துள்ளார்.

சோமசுந்தர நாயகர் அவர்கள், தம் சார்பில் தம்மை அறியாமலே தம் மாற்றுரை முருகவேள் என்னும் புனை பெயரில் நாகை நீலலோசனி முதலிய இதழ்களில் கட் டுரைகள் வரைந்து மறுத்து வந்த, இளைஞராய அடிகளைப் பலர் வாயிலாக யாரென்று உசாவி யறிந்து நேரில் வர வழைத்துக் கண்டு மகிழ்ந்து, "துகளறு போதம்" என் னும் உரையெழுதப்பெறுத சித்தாந்த நூலைக் கொடுத்து அதற்கு உரைசெய்யுமாறு பணித்தாராக, அங்ஙனமே செய்து கொணர்ந்து காட்டிய அடிகளின் உரைத்திறனை வியந்து "இது சிவஞான முனிவரர் உரையே போலச்

சிறந்து திகழ்கின்றது" என இளமைப் போதிலேயே பாராட்டினுரெனின் வேறென் சொல்வது?

பேராசிரியர் கா. நமச்சிவாய முதலியார்; முது பெரும்புலவர் பெரும்பேராசிரியர் பண்டிதமணி மு. கதிரேசஞ் செட்டியார்; சிலப்பதிகாரம் அகநானூறு முதலினவற்றின் உரையாசிரியர் பண்டித நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார்; கரந்தைக் கவியரசு; தமிழ்வேள். த. வே. உமாமகேசுரம் பிள்ளை; புலவர் ஏறு. ஆசிரியர். அ. வரதநஞ்சையப் பிள்ளை போன்ற பெருமக்கள் பலரும் அடிகளிடம் பேரன்பும் பெருமதிப்பும் மிக்குடையவரே யாவர். பிற்கால இடைக்காலப் புலவர்கள்போல் அல்லாமல்,

செறுத்த செய்யுட் செய்செந் நாவின்
வெறுத்த கேள்வி விளங்குபுகழ்க் கபிலன்.
புலனழுக் கற்ற அந்த ணாளன்!
அன்றும் பரணன் பாடினன்!
புகழ்ந்த செய்யுட் கழாஅத்தலை!
திருந்து மொழி மோசி!
ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி மாங்குடி மருதன்!

என்றிங்ஙனம் ்ங்ககாலப் புலவருட் சிலர் தம்மைத் தம்மையொத்த பிற புலவரும் பாராட்டிப் பாடும் நிலையில் தலைமை சான்று வைகியிருந்தனராதல் போல, அடிகளும் தம்மைப் பிற அறிஞரெல்லாம் பெரிதும் புகழ்ந்தோதும் நிலையில் திகழ்ந்து வரும் சிறப்பினை என்னென்பேம்!

சென்னைப் பச்சையப்பன் கல்லூரியின் முன்னைத் தமிழ்ப் பேராசிரியர் மணி. திருநாவுக்கரசு முதலியார், திருக்குறள் அறத்துப் பாலுக்கு விருத்தியுரை ஒன்று கண்ட நாகை தண்டபாணிப் பிள்ளை, புதுவன புனையுந் திற

னிற் சிறந்து விளங்கிய நாகை கோபால கிருட்டினர், சித்தாந்தப் பேராசிரியர் பாரிப்பாக்கம், கண்ணப்ப முதலியார், சிவநெறிச் செஞ்சொற் கொண்டல் சங்கநூற் புலவர். ஆசிரியர் இளவழகனர் போன்ருரும், பிறர் பலருமெல்லாம் அடிகள்பாற் பயின்றவரே எனின், அடிகளின் சிறப்பினை "முழுவதுங் கண்டவனைப் படைத்தான் முடிசாய்க்க அப்பாலான்" என்னும் முறைமை பற்றி ஓர்ந்துணர்ந்து கொள்ளலாம்.

அடிகளின் சிறப்பியல்புகள்

அடிகளை நினைவு கூருங்காலெல்லாம் நல்லிசைப்புலவர் நவிலுமாறு போல அவர் தம் சிறப்பியல்புகளே நம் நினைக்கு முன் வருகின்றன. அடிகளை 'ஞானத்தின் திருவுரு' எனலாம். அடிகள் சைவம் வைணவம் சமணம் புத்தம் கிறித்தவம் இசுலாமியம் என்னும் பல்வேறு சமய நெறிகளையும் ஆராய்ந்துணர்ந்தவர். அவர் தம் நெடிய தோற்றம் கல்வியினலாய பெருமிதங் காட்டுவதாகும்

'சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை
வெல்லும்சொல் இன்மை அறிந்து'

என்னும் குறண்மொழி கடைப்பிடித்துத் தாம் வெளியிடும் கொள்கைகளில் 'தோலா நாவின் மேலோ'ராக விளங்குபவர் அடிகள் ஒருவரே. அடிகள் எதனையும் ஆராயாது கூருர். ஆராய்ந்தாற் கூருது விடார். அடிகள் நிறுவிய கொள்கைகள் ஒவ்வொன்றும் மேலும் மேலும் உரம் பெற்றனவே யன்றி, ஒன்றேனும் பிழைபட்டதின்று.

'சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது'

என்றபடி, தாம் ஆராய்ந்து புதிதாக வெளியிடும் கொள்கைகளைப் பிறர்க்கெடுத்து நன்கினிது செலச் சொல்லும்

திறனும், அதனை மேலும் மேலும் சோர்வின்றி ஆராய்ந்து உறுதிப்படுத்தும் திறனும், அங்ஙனம் ஆராய்ந்து வெளியிடுகின்றுழி அதனை எதிர்ப்பார் எத்துணையர் உளராய வழியும் அவர் தமக்கெல்லாம் அஞ்சாது நின்று ஆண்மையோடு போராடும் திறனும், அடிகள் தமக்கிணை தாமே யாதல் பற்றியே அடிகளின் ஆராய்ச்சிகட்கெல்லாம் முதற்கண் பெரிதும் எதிர்ப்பு இருந்ததாயினும், நாளடைவில் அவையெல்லாம் படிப்படியே குறைந்து மறைந்தொழிய, அடிகளே பெருவெற்றி பெறலாயினர்!

ஒழுங்கு கட்டுப்பாடு உறுதி செம்மை நேர்மை திருத்தம் என்பனவற்றை அடிகளின் ஒவ்வொரு சிறு செயலிலும் காணலாம். அவர்தம் கையெழுத்து அச்செழுத்துப் போன்று மிகத் திருத்தமாக இருக்கும். காலந் தவறாமை (Punctuality) செய்வன திருந்தச் செய்தல் (Perfectness) என்பன அடிகளின் கடைப்பிடி. உடலோம்புந் துறையில் அடிகளைப் போல் கண்ணும் கருத்துமாக எவருமிரார். அமைதியையே அடிகள் பெரிதும் விரும்புபவராதலின் ஆராய்ச்சியோடு கருத்தூன்றிப் பேசும் தம் விரிவுரை அவைகளில் நிகழும் ஒரு சிறு ஓசையையும் அடிகள் பொறுப்பாரல்லர். அடிகளின் குரல் குயில் போன்று மிக மெல்லியதாய் இனியதாய் இருக்கும்.

அடிகள் தம் ஆராய்ச்சிகட்கெல்லாம் உரிய அரிய அடிப்படையும் நிலைக்களனுமாகத் தொல்காப்பியம் என்னும் பழந்தமிழ்ப் பெருநூலையே கொள்வர். அடிகளின் நூல்களால் அவர்கள் திருமந்திரம் என்னும் அரிய நுண்பொருள் மறை நூலின் நுட்பங்கள் பலவும் அறிந்து கைவந்தவர் என்பது புலனாகின்றது. அவையிற்றையெல்லாம் வருங்காலத் தமிழகம் அறிந்து பயன் பெறும் வகையில்

மறைந்துபடாநிலையில் அடிகள் வரைந்து வைப்பராயின் மிக நலமாகும். புராணப் பொய்ம்மைகளை மறுத்துக் களைதற்கு,

"அப்பணி செஞ்சடை ஆதி புராதனன்
முப்புரம் செற்றனன் என்பர்கள் மூடர்கள்
முப்புர மாவது மும்மல காரியம்
அப்புரம் எய்தமை யாரறி வாரே"

என்பன போல்வவற்றை அடிகள் எடுத்து விளக்குந் திறம் மிக அழகா யிருக்கும். ஏனையோர் போல அடிகள் தம் நூல்களுக்குப் பிறரிடம் மதிப்புரை பெறாஉம் இயல்பினர் அல்லர். அடிகள் தம் நூல்களைத் தாமே பதிக்கும் பழக்கம் உடையவர்.

'எழுத் தெண்ணிப் பயின்றவர்' எனப் பெறும் கல்வி நலத்தில் அடிகள் தனிச் சிறப்புடையவர். சிவஞான போதம் 12 நூற்பாக்கள் 41 வரிகள் 216 சொற்கள் 624 எழுத்துக்கள் என எண்ணிப் பார்த்து முதன் முதற் குறிப்பிட்டவர் அடிகளே! 'திருவாசகம் முழுவதும் சொற்களை எண்ணிப் பார்க்க முதன்மையாயுள்ளன 2810 சொற்களேயாம். இவற்றுள் 373 சொற்கள் வடசொற்கள். இவற்றை வகுத்துப் பார்த்தால் திருவாசகத்தில் 100 க்கு 7 அல்லது 8 விழுக்காடு வட சொற்கள் வந்து விரவலாயின என்பது புலப்படும்' என்றிங்ஙனம் சிலப்பதிகாரம் மணிமேகலை கல்லாடம் முதலிய பல நூல்கள் குறித்து அடிகள் எழுதிச் செல்லுதலை விரிவஞ்சி விடுகின்றுமாயினும், தாலிபுலாக நயம் பற்றி ஒரு வகையிற் கருதியுணர்ந்து கொள்க. அடிகளின் தொலைவிலுணர்தல் 24 ஆண்டுகளும், மாணிக்கவாசகர் வரலாறுங் காலமும் 6 ஆண்டுகளும், யோக நித்திரை 11 ஆண்டுகளும், 'திருவொற்றி முருகர் மும்மணிக் கோவை' உரைச் செப்பம் காண்டற்கு 8 ஆண்

டுகளுமாக, இங்ஙனம், அடிகளின் பல நூல்களும் பன்னெடுங் காலம் ஆராய்ந்து அரிய முறையில் எழுதப்பட்டன என்பதும் கடைப்பிடிக்க.

மற்றும் தமிழில் மொழிநூலாராய்ச்சி (Science of Philology) க்கு முதன் முதல் வழி வகுத்தவர்களுள் அடிகளும் ஒருவராய்த் தனிச் சிறப்புடையவர். இப்போது மொழிநூற் றுறையில் ஞானப்பிரகாசர், தேவநேயப் பாவாணர் வரதராசனர் போன்றார் பலர் பல நூல்கள் வெளியிட்டுள்ளன ரேனும், முதன் முதல் மொழி நூல் வெளியிட்ட மாகறல் கார்த்திகேய முதலியார் என்னும் அறிஞரே அடிகளைத் தம் நூலிற் குறிப்பிட்டுள்ளனர். அடிகளின் மொழியாராய்ச்சி வன்மையினாலன்றோ, தமிழ் தானே தனித்தியங்கும் என்பது வெள்ளிடை விலங்கலாயிற்று!

அஞ்சாமையும் துணிவும் மிக்க ஆண்மையால் அடிகள் நெற்றிக்கண் காட்டினும் குற்றம் குற்றமே என்ற நக்கீரரை ஒத்தவர். நக்கீரராதல்,

'சிறியேன் சொன்ன அறிவில் வாசகம்
குறியெனக் கொள்ளாய் ஆகல் வேண்டும்'

எனப் பின்னர்த் தம் கொள்கையிற் பிறழ்ந்து நெகிழ்ந்ததாகக் கதையுலவுகின்றது. அடிகளார் அப்பெற்றியர் அல்லர்! 'இவர் தெய்வத் தன்மை வாய்ந்த ஆசிரியர்; இவர் இயற்றிய இந் நூலிற் குற்றம் குறையாவது ஏதும் இராது என்று குருட்டுப் பிடியில் உறைத்து நின்று தாமும் அவர் நூற்பொருளை ஆராயாது, ஆராய்வார் சிலர் தம்மையும் கண்டவாறு புறம் பழித்துப் பேசி உலகினை அறியாமையில் அழுத்துவோரும் உளர்; அத்தன்மையினர் உரைகளை ஒரு பொருட்டாக வையாது

மெய்ம்மை ஆராய்ச்சியிற் செல்லுதலே உலகினைத் தேற்றும் சான்றோர் கடனும்' எனக் கொண்டு 'எல்லாரானும் தெய்வத்தன்மை யுடையராகக் கொள்ளப்பட்டார் நூல்களிலும் ஆராய்ந்து செல்லும் நெறியிற் பிழையெனக் கண்டவைகளை மறையாது வெளிப்படையாக எடுத்துக் காட்டி யிருக்கின்றேம்' என வரையும் அடிகளின் நெஞ்சுரமும் நேர்மையுந் தான் என்னே? 'I have the strength of ten, because my heart is pure' என்னும் முதுமொழி ஈண்டைக்கு நினைவிலுறுகின்றது.

நூலாசிரியர், போதகாசிரியர், உரையாசிரியர், இதழாசிரியர், பதிப்பாசிரியர், ஞானாசிரியர் என்னும் பல திற ஆசிரியராயும் அடிகள் ஒருவரே இலங்குகின்றார். ஆசிரியர் தொல்காப்பியனார்,

'காமஞ் சான்ற கடைக்கோட் காலை
ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே'

என விதித்ததற்கேற்ப, சிவத்தொண்டும் தமிழ்த்தொண்டும் செய்தற்கென்றே வாழ்க்கையை அமைத்துக் கொள்வதே துறவு நிலை என்பது அடிகளின் துணிபு.

இசையரங்குகட்கும், நாடகம் கூத்து வேடிக்கை திரைப்படம் முதலிய வெற்றாரவார நிகழ்ச்சிகட்கும் ஆயிரக் கணக்கிற் பொருளை வாரி வாரி இறைக்கும் இஞ்ஞான்றைத் தமிழகத்தில், தமிழ்ப் புலவர்களும் தாம் வறுமையில் வருந்தாமல் தம் கல்வி கேள்வி ஆராய்ச்சி வசதிகட்கும், மகிழ்வாகவும் அமைதியாகவும் நடைபெறுங் குடும்ப வாழ்க்கை நலங்கட்கும், நூல்கள் வாங்குதல் நூல்கள் இயற்றுதல் நூல் பதிப்பித்தல் முதலிய தொண்டுச் செலவுகட்கும், பிறர்பாற் சென்று பின்னிலை நின்று

இரந்து வாழ வேண்டா நிலையில் தன்மதிப்போடு பெருமித உரிமை வாழ்வு வாழ்தற்பொருட்டும், தாம் செய்யும் விரிவுரைகட்கு வேலைக்குரிய கூலியாகவேனும் பொருள் பெற வேண்டுமேயல்லாமல், பிறரெல்லாம் பல்லாற்றானும் தீய வழிகளிலேனும் பொருள் சேர்த்துச் செல்வர்களாய் இன்புற்று வாழத் தாம் மட்டும் ஏழை எளியவராகவே கிடந்து துன்புற்றுத் தாமும் நலம் பெறாமல், தம்மைச் சார்ந்த குடும்பத்தினரையும் நலியவிடுதல், அறமும் உலகியன் முறையும் வாழும் நெறியும் அன்று என்பது அடிகளின் துணிபு. என்னை? "முனிவரும் மன்னரும் முன்னுவ பொன்னால்முடியும்" ஆதலானும், "பொருளிலார்க்கு இவ்வுலகம் இல்லை" யாதலானும் என்பது. ஆதலின் காசு கொடுக்க மனம் வாராத கயமை இவறன்மையாளரும், எண்ணிப் பார்க்கும் நுண்ணறிவிலாரும் என்னும். எவர் எது கூறினும், தம் கொள்கையிற் சிறிதும் பிறழாது உறுதியாய் நின்று அறிஞர் பிறர்க்கெலாம் தம் சொல்லானும் செயலானும் வழிகாட்டி வருபவர் அடிகள்! இஃதன்றோ தன்னிலையிற்றிறழாமை என்னும் தமிழர்க்குரிய தனிப்பெரும் பண்பாகும்.

நடமாடும் நூல்நிலைய (Walking- Library) மாகிய அடிகள் தாம் அமைத்துள்ள நூறாயிரங் காணத்தின் மேலும் மதிப்பிடத்தக்க, ஆயிரக்கணக்கான நூல்கள் அடங்கியுள்ள பெரியதொரு நூல்நிலையத்திருக்கும் அத்துணைப் புத்தகங்களையும், மிகச் செவ்வையாக அட்டையிட்டும் அடுக்கியும் ஒழுங்காகவும் போற்றி வைத்திருக்கும் அருமை யாவரும் கண்டு வியக்கற்பாலது.

'புத்தகமே சாலத் தொகுத்துப் பொருள்தெரியார்
உய்த்தகம் எல்லாம் நிறைப்பினும்—புத்தகத்தைப்
போற்றும் புலவரும் வேறே பொருள்தெரிந்து
தேற்றும் புலவரும் வேறு.'

என்னும் செய்யுள் அடிகளிடத்துப் பொருந்தாதாகும். நூல் நிலையத்தே புத்தகங்களைத் தகுதியறிந்து ஒழுங்குறச் சேர்த்தமைத்து வரிசையுற வைக்குந் திறனை, 'மனித வசியம்' என்னும் நூலில் அடிகள் விரித்துரைத் திருத்தல் சால அழகிது!

'கல்லாக் கழிப்பர் தலையாயார்' என்னும் உண்மையினை அடிகளை நேரிற் கண்டறிந்து கொள்ளலாம்.

"கற்றதுகைம் மண்ணளவு கல்லா துலகளவென்
றுற்ற கலைமடந்தை ஓதுகின்றாள்"

என்பதனை அடிகளார்மேல் ஏற்றி மாற்றிச் சொல்லுதலே பொருத்தமும் உண்மையுமாகும் எனலாம். அடிகளின் விரிவுரை

"உடல்குளிர உயிர்தழைக்க உணர்ச்சி ஓங்க
உளங்கனிய மெய்யன்பர் உள்ளத் தூடே
கடலனைய பேரின்பந் துளும்பச் செய்யும்"

தகைமையினதாகும். தம் விரிவுரைகளின் போது அடிகள்

"யானேபொய் என்னெஞ்சும் பொய்என் அன்பும்பொய்
ஆனால் அடியேன் அழுதால் உன்னைப் பெறலாமே"

என்பனபோலும் உருக்கமான திருப்பாடல்களைக் கூறுங்கால் பேச்சுத் தடைப்பட்டு, பச்சிளங் குழந்தைபோல் விம்மி விம்மி அழுங்காட்சி கன்னெஞ்சமும் கரைந்துருகச் செய்யும் மாட்சியினதாகும். அதுபோழ்து

"அனுசயப் பட்டது விதுஎன் றுதே
கனிமனத் தொடுகண் களும்நீர் மல்கிப்
புனிதனைப் பூவ னூரனைப் போற்றுவார்
மனித ரிற்றலை யாய மனிதரே"

என்னும் திருப்பாடல் நம்மனோர்க்கு நினைவில் வரும்.

அடிகள் நால்வர்களுள் திருஞான சம்பந்தர்பால் தனிச் சிறப்பாகப் பேரன்புடையவர். ஏனை மூவரினும் அவரே தலை சிறந்தவர் என்பதனை அடிகள் மிகத் திறம் பட 'மாணிக்கவாசகர் வரலாறும் காலமும்' என்னும் நூலின் இறுதியில் விளக்கியிருக்கின்றார். 1300 யாண்டு கட்கு முன் 'தமிழ் ஞானசம்பந்தன்' 'தமிழ்ஞானசம்பந் தன்' எனத் தம்மைக் கூறிக்கொண்டு, தமிழன் என்னும் பெருமித உணர்ச்சியைத் தமிழர் அனைவரும் கொள்ளு மாறு முதன் முதல் வழிகாட்டிய அப்பெரியாரை வழி படும் நலத்தாற் போலும் அடிகளும் அத்தகைய பெருமித உணர்ச்சியினராயே விளங்குகின்றார்! அடிகளின் 'இந்தி பொதுமொழியா?' என்னும் நூலும்; 'Tamil Studies' என் னும் நூல் எழுதிய M. சீனிவாச ஐயங்கார் தமிழில் அற நூல்கள் (Ethics) மிகுந்திருப்பது தமிழரது ஒழுக்கக் குறைவினையே உணர்த்தும் எனக்கூறி வழிந்தனராக, அவர் தம் செருக்குரைப் பழிப்புரையைப் பேராண்மை யோடு மறுத்தொழிக்கும் முகத்தான் வடமொழி நூற் கூளங்களையும் வடவர் ஒழுக்கக்கேடுகளையும் விரித்தெடுத் துரைத்து வெளிப்படுத்தி 'மாணிக்கவாசகர் வரலாறும் காலமும்' என்னும் நூலில், அவர் தமக்கு நல்லதொரு 'சாட்டை' நல்கியிருக்கும் திறமும் பிறவும்; தமிழ்மொழிப் பாது காப்பிலும், தமிழர் நல்வாழ்விலும் அடிகள் கொண்டிருக் கும் விழிப்பு மிக்க கருத்தாழம் உணர்த்துவனவாகும்.

மேற்கூறிப் போந்தனவற்றானும், சிறந்துயர்ந்த செந் தமிழ் நடையில் தன்மைப் பன்மையில் 'யாம்' (Royal We) எனப் பெருமிதம்படத் தம் நூல்களுள் எழுதிச் செல் லுதலானும், 'நாக்கிற் றிருஞான சம்பந்தர்' என்றபடி மாற் றுரை மறுத்துரைக்கும் உரைத்திறத்தானும், நெருங்கு தற்கரியர் என நம்மனோர் நினைக்க நேருமாயினும் அருமை

யில் எளிய அழகராய அடிகள், உண்மையிற் காண்டற் கெளிமையும் கடுஞ் சொலின்மையும் கண்ணோட்ட முடைமையும் கொண்டு விளங்குகிற்கும் தன்மை,

'ஊர்க்குறு மாக்கள் வெண்கோடு கழாஅலின்
நீர்த்துறை படியும் பெருங்களிறு போல
இனியை பெரும எமக்கே மற்றதன்
துன்னருங் கடாஅம் போல
இன்னாய் பெரும நின் ஒன்னா தார்க்கே'

எனப் போதரும் புறநானூற்றுச் செய்யுளை நினைப்பிக்கும்

'பெற்றால் நினைப்பெற் றவர்போற் பெறலும் பிறப்ப
[துண்டேல்
நற்றா ரணியில் நினைப்போற் பிறப்பதும் நல்லகண்டாய்'

என்னும் நிலையில் திகழும் அடிகள் 'தொன்மையவாம் எனும் எவையும் நன்றாகா, இன்று தோன்றியன எனு மெவையும் தீதாகா' எனுங் கருத்தினராய், 'முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம் பொருளாய்ப் பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப் பெற்றியராய்' விளங்குகிற் கும் இயல்புகளெல்லாம் உளங்கொள அளவிட்டு விளம்ப வல்லார் யார்?

அடிகளும் தமிழகமும்

எத்துணையோ நூற்றாண்டுகட்கு ஒரு முறையே தோன்றக்கூடிய ஒப்புயர்வற்ற பேரறிஞராய அடிகளார் இந் நூற்றாண்டில் நம்மிடையே நாம் காணத் தோன்றி வாழ்ந்துவருவது நாம் பெற்ற பெறலரும் பெரும் பேறாகும். ஆயினும், 'இனியார் உளரோ? முன்னும் இல்லை' என்னும் நிலை யிற்சிறந்து விளங்கும் அடிகளை,

'பாரி பறம்பிற் பனிச்சுனைத் தெண்ணீர்
ஓரூர் உண்மையின் இகந்தனர் போல;'

பயன்கொண்டு நலம்பெருது வறிதே இருந்து வருகின்றேம். Blessings till they are lost, are not valued most என்னும் ஆங்கில முதுமொழிக்கியையவே நம் செயலும் இயலும் உள்ளன. பொன்னே கொடுத்தும் புணர்தற்கரியாரைக் கொன்னே தலைக்கூடப் பெற்றிருந்தும் அன்றே நாம் நயமில் அறிவினராய்ப் பயமின்றி வறிதே கழித்து வருதல் மிகவும் வருந்தத் தக்கதே. இதன் பொருட்டு என்றேனும் இனி மற்றொருகால் எற்றென்றிரங்குதலே செய்வேம்!

மேலை நாட்டில் செகப்பிரியர் என்னும் ஆங்கில நல்லிசைக் கவிஞர் உயிர்வாழ்ந்த இல்லத்தையும் ஒரு கோயிலாக்கி, இவ்வுலகம் எங்கணுமுள்ள ஆங்கில அறிஞர்கள் மெய்யன்புடன் சென்று அங்கே அமைந்திருக்கும் அவர்தம் உருவத்தை வணங்கிப் போதருகின்றனர். அல்லதூஉம், இஞ்ஞான்று உயிர்வாழ்ந்திருக்கும் அறிஞர் பெர்ஞர்ட்ஷாவினை ஆங்கிலேயர் எத்துணை அளவுக்குப் போற்றி வருகின்றனர்! அவரது கையெழுத்துக்குத் தான் (Autograph) எத்துணை மதிப்பிருக்கின்றது! அவர்தம் வாயினின்று வெளிவரூஉம் ஒலிக் குறிப்புக்களைத் தானும் ஆங்கிலேயரெல்லாம் எங்ஙனம் பாங்குறப் போற்றுகின்றனர்! அவரது தாடி மயிருக்கும் கூட உலகச் செய்தித் தாள்களில் எத்துணை யளவுக்கு விளம்பரம் தரப் பெறுகிறது! அடிமைத் தமிழகத்தின் புலமைத் தமிழ் மகன் என்பதனுல், தமிழர் அளிக்கும் ஆக்கம் ஊக்கம் என்பன வற்றிற் குறைந்தவரேயன்றி, அறிஞர் பெர்ஞர்ட்ஷாவிற்கு அடிகளார் அறிவாற்றலில் எவ்வகையிற் குறைந்தவராவர்? ஆங்கிலம் போல அருந்தமிழும் உலகெலாம் பரவிப் பொலியும்நிலை ஒருகாற் போதரு

மாயின், அதுபோழ்தத்து அடிகளாரின் பெருமை மலை விளக்கென நிலைபெற விளங்குமன்றோ? தமிழகமே! சற்றுக் கருதிப் பார்?

அடிகள் திருவாசகத்திற்கு உரையெழுத முற்பட்ட போது தெய்வத் திருமுறைகளுக்கு மனிதன் உரை எழுதுதல் கூடாதென்னும் குருட்டுப் பாழ்ங் கொள்கை கொண்டு 'திருவாசக வேதாசல விரிவுரை மறுப்பு' வரைந்து வீண் எதிர்ப்புச் செய்தாரும் ஒரு காலத்து உளராயினரல்லரோ? அஞ்ஞான்று அடிகள் அடங்கி ஒடுங்கி யிருந்து விட்டிருந்தனராயின், இப்போது பலர் வெளியிட்டிருக்கும் திருவாசக வுரைகள் நம்மனோர்க்குக் கிடைத்திருக்குமோ? அடிகளின் புதல்வர் என்ற ஒரே காரணத்திற்காக மறை. திருநாவுக்கரசரைப் பேசவிடாமல் திருப்பெருந் துறையிற் பண்டிதர் ஒருவர் பிறரைக் கொண்டு தடுத்துவிட்டுக் கொடுமை செய்த காலமும் உண்டன்றோ? வடசொற்கலப்பும் சாதிச் செருக்கும் புராணப் பொய்ம்மைளும் சிவநெறிக்கு வேண்டுவதில்லை என்று அடிகள் கூறத் தொடங்கியபோது வைதிகர்களும் சாதிவெறியினரும் பௌராணிகரும் பழம் பண்டிதர்களும் பிறரும் அடிகளைப் பழித்த பழிப்புக்கும் இழைத்த கொடுமைகட்கும் எல்லையுண்டோ? சீர்திருத்தப் பகுத்தறிவு ஆராய்ச்சி வளர்ச்சிக்கு வழிகோலிய அதனால் சமய வெறியினரானும், உண்மைச் சமயநெறி போற்ற விழைதலால் சமய உணர்ச்சி வேண்டாதாரானும் எதிர்க்கப் பெற்று "இகன்மீக்கடவும் இருபெரு வேந்தர் வினையிடை நின்ற சான்றோர் போல" அடிகள் இருதிறமும் ஒருகால் அலைக் கழிக்கப் பெற்றமை ஐயகோ கொடிது! அதன் திறமெல்லாம் அடிகளின் 'சைவசமயத்தின் நெருக்கடியானநிலை' என்னும் சிறியதொரு நூலின்கண்ணேயே உணரலாம்.

சிவஞான போதம் தமிழ்முதல் நூலே என்றும் தமிழிலேயே நான்மறைகளும் நன்மந்திரங்களும் பண்

டிருந்தன என்றும் அடிகள் இளமையிலேயே கூறியபோது நல்லசாமிப் பிள்ளையை யுள்ளிட்ட நல்லறிஞர் பலருங் கூட அடிகளை எதிர்த் தடக்கிவிட முனைந்தனர் அல்லரோ? சைவசித்தாந்த மகாசமாஜத்தை நிறுவியவர்களுள் முதன்மையரான அடிகள் பின்னர் அதனொடு தம் தொடர்பை அறுத்துக் கொள்ள நேர்ந்தது எதனால்? எவ ரெவர் நூல்களோ வைக்கப் பெறவும் அடிகளின் நூல்கள் மட்டும் பாட புத்தகங்களாகப் பல்கலைக் கழகத்தாரால் வைக்கப் பெறுமை ஏன்? சைவமும் தமிழும் உணர்ந்த சான்றோர் தலைவராகிய அடிகளை, அடிகளின் கொள்கைகள் ஆக்கம் பெற்றுவரும் இந்நாட் களிலும் கூடச் சைவ ஆதீனத் தலைவர்கள் தக்கவாறு போற்றிப் பயன்கொள்ள முன்வாராது தயங்குவது எற்றிற்கு? அம்மையப்பர் திருவுருவச் செம்மை நலத் தினையும், அம்பலவாணர் திருக்கூத்தின் உண்மையினையும், சிவலிங்க வுண்மைச் சிறப்பினையும் அறிவியல் அடிப் படையில் (Scientific basis) விளக்கிக் காட்டிச் சிவநெறிச் சிறப்பினை யாவரும் தெளிய நிறுவிய அடிகட்குச் சைவத் தமிழுலகம் செய்த கைம்மாறு தான் யாதோ? எவ ரெவர்க்கோ அறுபதாம் ஆண்டு நிறைவு விழாக் கொண் டாடும் தமிழகம் அடிகளின் நிறைவை மறந்து புறக் கணித் தொழித்தமை யாது பற்றியோ அறிகிலேம்! ஆயிரம் ஆயிரமாகப் பெருகிவரும் தமிழ்மாணவ இளை ஞர் உலகமே! அந்தோ! இக் கொடுமையை நீயேனும் நினைந்துபார்!

"எரியாற் சுடப்படினும் உய்வுண்டாம் உய்யார்
பெரியார்ப் பிழைத்தொழுகு வார்"

என்றுணர்ந்து நீயேனும் இவ்வழுவாவன வற்றிற்குக் கழுவாய் தேடாயோ!

தமிழகமே! எல்லையற்ற அடிகளின் பெருமையினை யாம் சொல்ல வல்லேம் அல்லேம். எனினும் உணர்ந்த வாற்றால் உணர்த்துவது எம் கடன் எனக் கொண்டு இயன்ற பெற்றி முயன்றுணர்த்தலுற்றேம். ஆசிரியர் தொல்காப்பியனார் கூறுமாறு போல, 'உணர்ச்சி வாயில் உணர்வோர் வலித்தே' யாதலின் உணர்ந்து கொள்ள வேண்டுவது நின் கடமை. 'நகுதலும் தகுதி யீங்கு ஊங்கு நிற்கிளப்ப' எனப் பரிபாடற்கண்ணும்,

'பொக்கம் மிக்கவர் பூவும் நீரும் கண்டு
நக்கு நிற்பன் அவர் தம்மை நாணியே'

எனத் தேவாரத்தும் வருதற்கேற்ப, தம்பெருமை கிளக்கலுற்ற எம்மை, 'இச்சிறாஅர் அறிந்தவாறு இத்துணையே போலும்' என அடிகள் நகுதற்கு முரியர். அத்தகு புகழ்மை வித்தகராய அடிகளாரை நினைந்து,

'Milton! thou shouldst be living at this hour;
England hath need of thee........
We are selfish men.

Oh! raise us up, return to us again,
And give us manners, virtue, freedom and power'

என்றிங்ஙனம் வோர்ட்ஸ்வொர்த் என்னும் ஆங்கிலக் கவிஞர் மில்டன் என்னும் கவிஞர் பெருமானை நினைந்தழைத்து வருந்திப் பாடுதல் போல, தமிழகமும் வருந்தி அலறிக் கதற நேரும்! ஆதலின் காலமுண்டாகவே அடிகளைக் காதல் செய்து பயன் கொண்டுய்மின் எனத் தமிழ் ஞாலம் நின்றாரைச் சாலவும் பரிந்து வேண்டுகின்றோம்! மக்கள் நூறுண்டு வாழ்க்கையை வற்புறுத் துணர்வித்த தக்காராகிய அடிகளையும்,

'ஒன்றுபத் தடுக்கிய கோடிகடை இரீஇய
பெருமைத் தாகநின் ஆயுள் தானே'

என்றாங்குப் பன்னெடுங் காலம், 'உள்ளடி முள்ளும் நோவ உறற்க தில்ல' என்னும் நிலையில் இன்புற நன்றினிது இறையருள் நலத்தாற் குறைவற வாழ்ந்து, இன்னும் தாம் செய்ய எண்ணும் பலவகைத் தமிழ்த்தொண்டும் சிவத்தொண்டும் நலமுறச் செய்து முடித்து, எளியோமாகிய எம்மனோரை உய்வித் தருள்க என இரந்து வேண்டிக் கொள்கின்றோம். 'யான்வாழும் நாளும் பண்ணன் வாழியர்' என்றாங்கு எம்மனோர் வாழ்நாளெல்லாம் கொண்டேனும், எண்ணில் பல்லூழி வாழ்வோர் வாழ அடிகளார் தாள் வாழியர் என வாழ்த்துகின்றோம். அடிகளார் வாழ்க! அவர்தம் புகழ் வளர்க! தொண்டு சிறக்க! நெறி வெல்க!

'துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்
திறந்தாரை எண்ணிக்கொண் டற்று'

'நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்'

'இத்தனை துணைத் தென்பதொன் றில்லை. உணர்வார்
மனத்துணையாம் நம்அடிகள் மாண்பு'

O-,6MMAw
N49

109112
EGMORE, MADRAS-600 008

75

தமிழ் இந்தியா பதிப்பகம்

13, அருணாசல ஆச்சாரி தெரு,
சென்னை-5.

எமது வெளியீடுகள்

1 இந்தி பொது மொழியா?

ஆசிரியர் மறைமலை அடிகளாரின் அரிய நூல்.

இந்தி எதிர்ப்பு இயக்கத்துக்குக் கடந்த பத்தாண்டுகளாகத் தமிழ்நாடு முழுவதும் பரவி உயிர்கொடுத்து உணர்ச்சியூட்டிவரும் ஒப்பற்ற நூல். இந்தியின் ஆக்கத்துக்குப் போராடும் எந்த அரசியல் தலைவரும்கூடப் பதில் சொல்லி மறுக்கமுடியாதவகையில் அதன் நிலையை நன்கு விளக்கும் நடுநிலையான ஆராய்ச்சி நூல். இந்தியைத் தவறாக ஆதரித்த ஆயிரக்கணக்கான காங்கிரசுக்காரர்களைத் திருத்திய நூல். தமிழ் வாழத் தமிழர் ஒவ்வொருவர் கையிலும் இருக்கவேண்டிய இன்றியமையாத நூல். மேலும் பரவுவதற்காக விலை குறைக்கப்பட்டிருக்கிறது.

விலை அணா 6.

2. INDIA'S LANGUAGE PROBLEM

இந்தியாவின் மொழிக் குழப்பம் பற்றி ஆங்கிலத்தில் பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரை M. A., L. T., Visarad (Hindi) அவர்கள் நடுநிலையோடு ஆராய்ந்து எழுதியுள்ள மேற்படி நூலுக்கு ஆசிரியர் மறைமலை அடிகளார் 38 பக்கமுள்ள ஓர் அரிய முன்னுரை தந்திருக்கிறார். இந்தியாவின் இக்கால அரசியற் கருத்து வேற்றுமைகளை எல்லாம் நன்கு விளக்கி ஒற்றுமைக்கு அடிகோலும் உயர்ந்த நூல். தமிழ் மொழியின் சிறப்பும் தகுதியும் இணைத்து என உலகுக்கு எடுத்துக்காட்டி எழுச்சியூட்டும் ஏற்றமுடையது.

218 பக்கம். விலை ரூ. **2-8-0**

முன் பணம் செலுத்தும் விற்பனையாளர் தேவை.

தகுதிக்கேற்ற கழிவு தரப்படும்.